# உதயன்

விலை ரூபா 8-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 மாசி 10 திங்கட்கிழமை (22-02-1999) UTHAYAN- A Lively National Tamil Daily கதிர்:74


23 FEB 1999 யாழ்ப்பாணம்

## சவூதி அரேபியாவில் கோஷ்டி மோதல்!

### 23 இலங்கையர் காயம்

கொழும்பு, பெப். 22

சவூதி அரேபியாவின் றியாத் நகரில் இடம் பெற்ற கோஷ்டி மோதல் ஒன்றில் 23 இலங்கையர்கள் காயமடைந்தனர்.

கடந்த வியாழக்கிழமை தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றும் இலங்கைத் தொழிலாளர்களுக்கும் பங்களாதேஷ் தொழிலாளர்களுக்குமிடையில் ஏற்பட்ட வாய்த்தகராறே கோஷ்டி மோதலாக மாறியது.

இந்தச் சம்பவத்தில் இரு தரப்பிலும் பலர் காயமடைந்துள்ள போதிலும் அவர்களில் 23 பேர் இலங்கையர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக 40 இலங்கையர்கள் உட்பட பலர் கைதாகி உள்ளனர். (இ-21)

## தேசிய சமாதானக் கூட்டமைப்பு

# விரைவில் ஜனாதிபதியை சந்திக்கும்

### புலிகளுடனான சந்திப்புக் குறித்து விளக்கும்

கொழும்பு பெப். 22

வன்னி சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி திரும்பியுள்ள தேசிய சமாதானக் கூட்டமைப்பு ஜனாதிபதியை விரைவில் சந்திக்கவிருக்கின்றது.

ஜனாதிபதியைச் சந்திக்க நேரம் ஒதுக்கித்தருமாறுகேட்டுள்ளதாகவும்-

அவரைச் சந்திக்கும் போது வன்னியில் விடுதலைப்புலிகளுடன் பேசிய விடயம் மற்றும் அங்குள்ள மக்களின் கஷ்டங்கள் குறித்து தெரிவிக்கவிருப்பதாகவும் — அந்த அமைப்பின் செயலாளர் பேராசிரியர் திஸ்ஸ விதானகே தெரிவித்தார்.

அதேசமயம் — தமிழர் விடுதலைக் கூட்டணி உட்படத் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளதாகவும் —

தமது முயற்சியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் — வர்த்தக சம்மேளனங்களின் கூட்டமைப்புத் தலைவர் லலித் கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

மதத்தலைவர்கள் அடங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# செம்மணிபகுதி நிலைமையை நேரில் ஆராய குழு வருகிறது!

## மடுப்பாதை ஊடாக 23 குடும்பங்கள் வன்னி வருகை

வவுனியா, பெப்: 22

ஒட்டுசுட்டானில் படையினரால் கைது செய்யப்பட்டு வவுனியா முகாமில் வைக்கப்பட்டுள்ளவர்களில் 23 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மடுபாதையூடாக இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இரகசியப் பொலிஸாரிடம் அறிக்கை சமர்ப்பிக்கும்

கொழும்பு, பெப்ரவரி 22

செம்மணியில் மனிதப் புதைகுழி உள்ளதாகக் கூறப்படும் பிரதேசத்தின் நிலைமையை நேரில் ஆராய்வதற்காக நிபுணர் குழு ஒன்று அடுத்த மாதம் 5 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கின்றது.

இந்தக் குழுவுடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களும் வருகின்றனர்.

செம்மணியில் மனிதப்புதைகுழி தோண்டுவது தொடர்பாக இரகசியப் பொலீஸார் யாழ்.நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுமீதான விசாரணை அடுத்த மாதம் 5 ஆம் திகதி யாழ்.மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் நடைபெற விருக்

( 10 ஆம் பக்கம் பார்க்க)



நெல் மணியை மட்டும் அல்ல செம்மணியையும் மழை குழப்புது பாருங்கோ!

## வாட்டர்ஜெட் மூழ்கடிப்பா? அல்லது புலிகள் வசமா?

கொழும்பு, பெப். 22

கிளாலி கடலேரியில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற மோதலில் கடற்படையினரின் வாட்டர் ஜெற் படகு புலிகளினால் கைப்பற்றப்பட்டதாக சண்டே ரைம்ஸ் ஆங்கில வார இதழில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் எழுதி உள்ளார்.

இந்த படகு புலிகளின் தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்திருந்தனர்.

இந்த படகில் '127 எம் எம் இயந்திரத் துப்பாக்கியும் நவீன ராடர் கருவியும் இரவுநேர பார்வை நோக்கியும் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த படகு 63 லட்சம் ரூபா பெறுமதியானது. பி. 174 இலக்கம் உடையது, 13. 5 மீற்றர் நீளமும் 13.8 மீற்றர் அகலமும் கொண்டது.

உள்ளூர் கப்பல் நிறுவனமான ''புளூஸ்ரார் மரைன்'' கம்பனி இதனைத் தயாரித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் கிளாலி கடலில் தாக்குதல் நடத்தப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கரையோரப் பாதுகாப்புக்கு விரைவில் தனி பொலீஸ் பிரிவு

கொழும்பு, பெப். 22

கரையோரப் பாதுகாப்பு பொலீஸ் பிரிவு ஒன்றை அமைக்கபாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் இந்தப் பிரிவை அமைப்பதற்கு முன்னோடியாக 40 பொலீஸாரை தெரிவு செய்யும் பணியில் பாதுகாப்பு அமைச்சு ஈடுபட்டுள்ளது.

இவர்களுக்கு படகு ஓட்டுதல், நீச்சல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படும்.

''வெள்ளை யானைகள்'' என்ற பெயரில் இயங்க உள்ள இந்தப் பிரிவுக்கு பொறுப்பாக பிரதிப் பொலீஸ் மா அதிபர் மெரில் குணரத்தின இருப்பார்.

கடலோரப் பகுதியில் கண்காணிப்புப் பணியில் இவர்கள் ஈடுபடுவர். (இ-3-10)

## தபால்திணைக்கள ஊழியர் இன்று வேலை நிறுத்தம்

கொழும்பு, பெப். 22

தபால் திணைக்களத்தைச் சேர்ந்த 24 ஆயிரம் ஊழியர்கள் இன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்கின்றனர்.

தபால் திணைக்களத்தை கூட்டுத்தாபனமாக்கும் அரசின் முடிவை எதிர்த்தே இந்த வேலை நிறுத்தம் நடத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த அடையாள வேலை நிறுத்தத்திற்கு தபால் திணைக்களத்தைச் சேர்ந்த அனைத்துத் தொழிற் சங்கங்களும் ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று மாலை கொழும்பிலுள்ள ''ஹைட் பார்க்'' மைதானத்தில் எதிர்ப்புக்கூட்டம் ஒன்றையும் நடத்த தொழிற்சங்கங்கள் ஒழுங்கு செய்துள்ளன. (இ-10-21)

## துப்பாக்கிச் சூட்டில் 2 இளைஞர் காயம்

மட்டக்களப்பு களுவன்கேணியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் இரு இளைஞர்கள் காயமடைந்தனர்.

விஜயராசா சிவகுமார் (16 வயது), பாக்கியராசா புண்ணியமூர்த்தி (21 வயது) ஆகிய இருவரும் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சீருடை தரித்தவர்கள்தான் இவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர் என்று கூறப்படுகின்றது. (இ-21)

## தரமற்ற அரிசி குறித்து விசாரணை நடத்தப்படும்

### ஒபடகே நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ். மாவட்டத்தில் நிவாரணம் பெறுபவர்களுக்கு வழங்குவதற்கென 'குமண' கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டதாகக் கூறப்படும் தரம் குறைந்த அரிசி தொடர்பாக விசேட விசாரணை ஒன்றுக்கு வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் என். கே. ஒபடகே உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த ஒபடகேயிடம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பூந்தோட்டம் முகாமில் அகதிகள் மீது தாக்குதல்

வவுனியா, பெப், 22

பூந்தோட்டம் அகதிமுகாமில் மக்களில் சிலர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டனர் என்று கூறப்படுகின்றது.

அந்த முகாமில் தங்கியிருந்தவர்களில் எட்டு இளைஞர்கள் புளொட் அமைப்பில் இணைந்ததாகவும்—

அதன் பின்னர் அந்த முகாமுக்கு வந்த இனந்தெரியாதோர் பிரஸ்தாப இளைஞர்களின் பெற்றோரைத் தாக்கியதாகவும்— தெரிய வந்தது.

தாக்குதலுக்குள்ளானவர்கள் முகாமில் உள்ள பொலீஸாருக்கு தகவல் கொடுத்ததாகவும்—

பொலீஸார் தாக்குதல் நடத்திய குழுவினரைத் தடுத்து வைத்துள்ளதாகவும்— கூறப்பட்டது. (இ-3-164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெற் செய்கை நட்டம்

# பனை வ்'வசாயிகள் இழப்பீடு கோருகின்றனர்

தென்மராட்சி, பெப். 22

பளைப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை பயனளிக்காததால் தமக்கு இழப்பீடு வழங்குமாறு நெற் செய்கையாளர்கள் கமநலசேவைகள் நிலையத்திடம் கோரி உள்ளனர்.

விதைப்புக் காலத்தில் ஏற்பட்ட கடும் வரட்சி அதன் பின்னர் ஏற்பட்ட பெரு வெள்ளம் ஆகியவற்றால் நெற் செய்கை இவ் வருடம் பயனளிக்காததால் இழபபீடு வழங்குமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

'கெயர்' நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட புதியரக நெல் இனம் பயிரிட்டோருக்கும் 25 சதவீத விளைச்சலே காணப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ-117)

# வானிலிருந்து விழுந்து ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், பெப். 22

ஓடிக்கொண்டிருந்த தட்டி வானில் இருந்து விழுந்து ஒருவர் காயமடைந்தார்.

அல்லைப்பிட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் வேலணையைச் சேர்ந்த செல்லையா இராசதுரை (வயது 51) என்பவரே காயமடைந்தவராவார்.

சம்பவதினம் புங்குடுதீவில் இருந்துயாழ்ப்பாணம்நோக்கி வந்த இந்ததட்டிவானின் பின் பகுதியில் பயணிகள் நின்று கொண்டு பயணம் செய்தனர் என்றும் —

பின்பகுதியில் பலகையை இணைக்கும் இரும்புச் சங்கிலி அறுந்து பலகை கீழே விழுந்த போது பயணிகளும் கீழே விழுந்தனர் என்று— தெரிவிக்கப்பட்டது.

அப்பொழுதே இவர் காயம் அடைந்தார்.

காயமடைந்தவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (இ-15)

## சிகிச்சை

நெல்லியடி, பெப். 22

கடந்த வருடம் ஜனவரி முதல் டிசெம்பர் வரையிலான பன்னிரு மாத காலப்பகுதியில் மந்திகை மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் 14 இலட்சத்து 8 ஆயிரத்து 323 பேர் சிகிச்சைபெற்றுள்ளனர்.

இதே காலப்பகுதியில் 47 ஆயிரத்து 458 நோயாளிகள் வார்ட்டுகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றிருந்தனர் என்றும் வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-109)

# கல் குவிக்கப்பட்டும் துன்னாலை வீதி திருத்தப்படவில்லை

வல்லை உப்பு றோட் துன்னாலை வீதியைத் திருத்துவதற்காக கல் குவிக்கப்பட்டும் இதுவரை வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இதே வேளை கரணவாய் மேற்குதலவல்லைக்குளம் புனரமைக்கப்படாமையினால் இப்பகுதியில் விவசாயம் செய்யும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# மட்டக்களப்பில் குடும்பப் பெண் கொலை

மட்டக்களப்பு, பெப். 22

மட்டக்களப்பு ஏறாவூரில் இளம் குடும்பப் பெண் ஒருவர் படுகொலை செய்யப்பட்டு அவரது சடலம் நிர்வாணமாக மரமொன்றில் கட்டி வைக்கப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் நள்ளிரவு கூரை வழியாக வீட்டுக்குள் இறங்கிய நபர்களால் இப் பெண் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்ட இப் பெண் என். எல். சித்தி (வயது 35) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சந்தேகத்தின் பேரில் மூவர் கைதாகி உள்ளனர்.

(இ-21)

# சம்பளம் மீளாய்வு செய்ய மின் ஊழியர் கோரிக்கை

இலங்கை மின்சார சபை ஊழியர்கள் தமது சம்பளம் மீளாய்வு செய்யப்படாவிட்டால் எதிர்வரும் 10 ஆம் திகதி வேலை நிறுத்தம் செய்யப்போவதாக எச்சரித்துள்ளனர்.

நேற்று முன்தினம் பதுளையில் கூடிய இலங்கை மின்சார சபை ஊழியர்களின் தொழில் சார் கூட்டுக் கமிட்டிக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

(இ-21)


# மரண அறிவித்தல்கள்

## தமிழரசன் - அன்ரன்ரவி
(தமிழன்)

யாழ்ப்பாணம் மடம் வீதியைச் சேர்ந்த தமிழரசன் — அன்ரன்ரவி (தமிழன்) 21—02—1999 காலை காலமாகிவிட்டார்.

அன்னார் குழந்தையின் அன்புக் கணவரும் தெல்லிப்பழை வீமன்காமத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் ஞானராசா — பூமணி (இத்தாலி) ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும் வசந்தி, சந்துரு (பிரான்ஸ்), ஸ்டாலின் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும் ரவீந்திரன், மசேன் ஆகியோரின் மைத்துனரும் ரொசின்ரேக்காவின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-02-99) திங்கட்கிழமை மாலை 3-00 மணியளவில் அவரின் சகோதரி திருமதி ரவீந்திரன் வசந்தியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**திருமதி ரவீந்திரன் வசந்தி**
432/2, மடம் வீதி,
யாழ்ப்பாணம்.
(63324)

## வல்லிபுரம் வில்லியம் சிதம்பரப்பிள்ளை
(இளைப்பாறிய முகாமையாளர், மக்கள்வங்கி, புத்தூர்)

வல்லிபுரம் வில்லியம் சிதம்பரப்பிள்ளை அவர்கள் 21- 02- 99 அன்று கர்த்தருள் நித்திரையடைந்தார்.

முன்னாள் அச்சுவேலி லயன்ஸ் கழகத்தின் தலைவரான இவர் இன்பமலரின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும் இன்பகுமார் (லண்டன்), சிதம்பரநாபி (இலங்கை வங்கி), மேகலா (லண்டன்), ஜீவகரன் (லண்டன்), கௌசலா (யாழ். மருத்துவ பீடம் இறுதியாண்டு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜ்குமாரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24- 02. 99 அன்று புதன்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**ராஜ்குமார்**
(மருமகன்)
88/28,ஏ, வாச வீதி,
கொழும்பு- 13
தொ. பேசி இல: 438289
(சி/6572)

## திருமதி நவரத்தினம் மகேஸ்வரி
(முன்னாள் சிவா பிறதர்ஸ் உரிமையாளரின் மனைவி)

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி நவரத்தினம் மகேஸ்வரி அவர்கள் நேற்று (21-02-99) காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கந்தையா தம்பதிகளின் அன்பு மகளும் சின்னத்துரை நவரத்தினம் (முன்னாள் சிவா பிறதர்ஸ் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் சிவானந்தம் (சிவா பிறதர்ஸ், கோண்டாவில்), சிவபாதம் (சிவபாதம் பலசரக்கு மாளிகை, கோண்டாவில்). பாலச்சந்திரன் (கனடா), திருமதி உ. சிவனேஸ்வரி (கனடா), சிவகுமார் (சுவிஸ்), சிவகுருநாதன் (சுவிஸ்), சிவசுந்தர் (ஜேர்மனி). சிவசங்கர், சிவரூபன் (A/L 97 மாணவன், கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சின்னத்துரை தம்பதிகளின் அன்பு மருமகளும் திருமதி ப. குணவதியின் அன்புச் சகோதரியும் திருமதி தவராணி, திருமதி பொன்மலர்ச்செல்வி, திருமதி கலைச்செல்வி (கனடா), உதயகுமார் (கனடா), திருமதி சிவகௌரி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் விஜயன், தீபன், றொஷாந்தன், டினேசன், யோகலட்சுமி, லோஜன், சதீஷன், அபினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பரஞ்சோதி, திருமதி கனகசபை, திருமதி கமலாதேவி, நடராஜா, இராஜலிங்கம் (மலேசியா), காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை, பாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் இன்று (22-02-99) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**நவரத்தினம்** (கணவன்),
**பிள்ளைகள்.**
ஜி.ஜி. பொன்னம்பலம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
(63322)

## லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி
இன்று முதல்
கரன் - ஆனந்தராபு
ரோகினி - வடிவேலு
நடித்த
சேர சோழ பாண்டியன்
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரம்)
T. P. No. 070-212223
(63315)

## நாகம்ஸ்
சுன்னாகம்.
கார்த்திக் - ரம்பா
கவுண்டமணி
நடித்த
உள்ளத்தை அள்ளித்தா
ரசிகர்களின் பஸ் போக்குவரத்து வசதி கருதி காட்சி நேரங்களில்மாற்றம்
புதிய நேரப்படி
11-00, 2-30
இந்தியாவில் 200 நாள்களுக்கு மேலாக ஓடிய வெற்றிச் சித்திரம்
(63307)

## ராஜா
யாழ்ப்பாணம்.
3ஆவது வெற்றி வாரமாக
அஜித் - தேவயானி
ஹீரா - மணிவண்ணன்
கரன் நடித்த
காதல் கோட்டை
இன்று காட்சிகள்
10-30, 2-30
(சி/6565)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி - 1999
யா/ பண்டத்தரிப்பு மகளிர் உயர் கல்லூரியில்

**19— 02— 99** அன்று நடைபெற இருந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி காலநிலை சீரின்மையால் ஒத்தி வைக்கப்பட்டு இன்று **(22—02—99)** நடைபெற உள்ளது. அத்தருணம் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

- அதிபர்

(63328)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின்

## இதய அஞ்சலி

வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்
திரு. க. கந்தசாமி
அவர்களின் அன்புத் தந்தையார்
**அமரர் க. கணபதி**

அவர்களின் மறைவினால் தாங்கொணாத் துயரில் இருக்கும் திரு. க. கந்தசாமி அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் அனைத்து அதிபர்கள், ஆசிரியர்கள் சார்பில் இதயம் கனிந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**த. மகாசிவம்**
பொதுச் செயலாளர்,
**இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.**
442, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
[சி/6571]

## கண்ணீர் அஞ்சலி

வடக்கு -கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்
உயர்திரு க. கந்தசாமி
அவர்களின் பாசமிகு தந்தையார்
**க. கணபதி**

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**மாணவர்கள், சிற்றூழியர்கள்.**
**பண்டத்தரிப்பு மகளிர் உயர் கல்லூரி**
(63327)

## புலமைப்பரிசில் 1999
**25 ஆவது பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்றோர்**

1. சு. லிஜா
யா/சுண்டுக்குளி ம.க. கல்.
2. ப. சஞ்சீவன்
யா/கொக்குவில் இ. ஆ. பா.
3. ஸ்ரீ. யாதவன்
யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்.
4. வி. மயூரன்
யா/இ. ஆ. பா.
5. பு. பிரசாந்
யா/உரும்பிராய் கணேச வித்.

**அடுத்த பரீட்சை**
[illegible]
BOND யாழ். நகர்.
(63326)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு லாகூரில் செங்கம்பள வரவேற்பு

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் சனிக்கிழமை மாலை பாகிஸ்தானுக்கான வரலாற்றுச் சிறப்புமிக்க பயணத்தை மேற்கொண்டார்.

விசேட பஸ் மூலம் லேகா எல்லையை அடைந்த இந்தியப் பிரதமரை பாகிஸ்தானிய பிரதமர் நவாஸ் ஷெரிப் இன்முகத்துடன் வரவேற்றார்.

இந்தியப் பிரதமரின் இந்த பாகிஸ்தான் விஜயம் இரு நாடுகளுக்குமிடையே நிலவும் அரசியல் பேதங்களைத் தணிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பயணமானது தெற்காசிய வரலாற்றில் அதி முக்கியமானதென நம்புவதாகவும் இரு நாடுகளும் எதிர்நோக்கும் சவால்களை எமது சந்திப்பின் மூலம் தணித்துக்கொள்ளலாம் எனவும் பிரதமர் வாஜ்பாய் பாகிஸ்தான் எல்லையில் வைத்துக் கூறினார்.

கடந்த கால பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திக்காமல் எதிர்கால நலன் குறித்து அலசுவதே சிறந்தது என பாகிஸ்தானிய தகவல்துறை அமைச்சர் முஷாஹிட் ஹுசேய்ன் கூறினார்:

எமது இரு நாடுகளையும் பிளவுபடுத்தும் விவகாரங்களை சுமுகமாகத் தீர்த்து வைக்கும் பொறுப்பு அரசியல் மேல்மட்டத்துக்கு உள்ளது எனவும் அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

பாகிஸ்தானிய எல்லையிலிருந்து அந்நாட்டுப் பிரதமருடன் ஹெலிக்கொப்டரில் லாகூர் பயணமான இந்தியப் பிரதமருக்கு அங்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது கடந்த ஒரு தசாப்தத்தில் பாகிஸ்தான் மண்ணில் கால்பதித்த முதலாவது இந்தியப் பிரதமர் வாஜ்பாய் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விஜயத்தின்போது இந்தியப் பிரதமரும் பாகிஸ்தானிய பிரதமரும் 52 வருடகாலம் நீடிக்கும் காஷ்மீர் எல்லைப் பிரச்சினை குறித்தும் அணுகுண்டு விவகாரம் குறித்தும் முக்கிய பேச்சுவார்த்தையில் ஈடுபடுவர் என நம்பப்படுகிறது.

இந்தியப் பிரதமரின் இந்த வரலாற்றுமிக்க பயணத்தில் இந்தியாவின் முன்னாள் டெஸ்ட் கிரிக்கட் வீரர் கபில் தேவ், ஹிந்தி நடிகர் தேவ் ஆனந் ஆகியோரும் இடம் பெற்றனர்.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் நடிகர் ஆனந்தின் ரசிகர் என்பதோடு முன்னாள் கிரிக்கற் வீரரும் ஆவார். (ஐ—10)

## 52 வயதில் 480 கிலோ நிறை

மொஸ்கோ, பெப். 22

உலகிலேயே மிகவும் குண்டான பெண் என்ற பெருமையை ரஷ்யாவைச் சேர்ந்த 52 வயதாகும் நடேஷ்டாமலேயேவா பெற்றுள்ளார்.

இவரின் எடை 30 வயது வரை சாதாரணமாகத்ததன் இருந்துள்ளது. அதன்பிறகு ஒவ்வொருநாளும் 500 கிராம் அதிகரித்துள்ளது.

முன்னதாக அமெரிக்காவைச் சேர்ந்த 385.5 கிலோ எடை கொண்டவர்தான் உலகிலேயே குண்டானவர் என்ற பெருமையைப் பெற்றிருந்தார்

(ஐ-10)

## ஷியா மதத் தலைவர் ஈராக்கில் படுகொலை

பக்தாத், பெப். 22

ஈராக்கில் ஷியா பிரிவு முஸ்லிம்களின் மதத் தலைவர் ஒருவரும் அவரது இரு மகன்களும் கடந்த வெள்ளியன்று படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அயத்துல்லா முகமட் ஷாதிக் அல் ஷதகே என்பவரே கொலை செய்யப்பட்ட மதத் தலைவராவார்.

இந்தக் கொலை தொடர்பாக ஈராக்கிய பொலீஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்என்றும்—

கொலையில் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் —

மேலும் பலர் தேடப்பட்டு வருவதாகவும் ஈராக்கிய செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இதேவேளை —

முகமட் ஷாதிக் அல் ஷதகே கடந்த இரு வாரங்களாக அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து வெள்ளிக்கிழமைத் தொழுகைக் கூட்டங்களில் குறை கூறிப் பேசினார் என்ற காரணத்தால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார் என்றும் —

இவரது கொலைக்கு அரசாங்கமே காரணம் என்றும்—

லண்டனில் உள்ள ஷியா பிரிவு தெரிவித்துள்ளது. எனினும் இந்தப் படுகொலைக்கு குற்றக் கும்பல்களே காரணம் என்று ஈராக் அரசாங்கம் அறிவித்துள்ளது. (ஐ-6)

உலக அரங்கில்

## சீனாவில் பிறந்துள்ள முயல் வருடம்

பெய்ஜிங், பெப், 22

பெப்ரவரி, 16ஆம் திகதி பிறந்த, சீனர்களின் பாரம்பரிய வருடத்திற்கு 'முயல் வருடம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. சாஸ்திர ரீதியாக, சீனர்களின் வருடம் பெப்ரவரி 16ஆம் திகதியே பிறக்கின்றது. இந்த முயல் வருடத்தில் கைத்தொழில் முன்னேற்றங்களும்: நாட்டில் ஸ்திரத்தன்மையும் நிலவும் என நம்பப்படுகின்றது. அத்துடன் காதலர்களுக்கு நன்மை பயக்கும் வருடம் இது எனவும் நம்பப்படுகின்றது.

சீன. கலண்டரின்படி இந்த முயல் வருடம் அதன் 4697 ஆவது வருடமாகும். அத்தோடு நிதிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வருடம் எனவும் கூறப்படுகின்றது.

பண்டைய சீனத்தத்துவ ஞானியான கொன்பூசியஸ் விஞ்ஞானி அல்பேர்ட் ஐன்ஸ்டீன் போன்றோரெல்லாம், முயல் வருடத்தில் பிறந்தவர்களே.

இந்த முயல் வருடத்தில் பிறந்தோரில் அநேகம் பேர். இலகுவில் உணர்ச்சி வசப்படக்கூடியவர்களாயிருப்பர். இவ்வருடத்தில் பிறந்தோரில் சிலபேர் சர்வாதிகாரத் தன்மையும் பொருந்தியவர்களாயிருப்பர்.

இதற்கு எடுத்துக் காட்டாக, ஜோசப் ஸ்டாலின், நெப்போலியன், மைக்கல் அஞ்சலோ ஆகியோரைக் குறிப்பிடலாம்.

முயல் வருடம், திருமணம் புரிவதற்கு உகந்ததல்ல எனப் பலபேர் நம்புவதால் இவ்வருடப் பிறப்பிற்கு முன்பே அவசர அவசரமாகத் திருமணம் முடித்தோர் அநேகர்.

(ஐ-10)

## 5 நுண்கருத் திட்டங்கள் சண்டிலிப்பாயில் பூர்த்தி

கோப்பாய், பெப். 22

ஐக்கிய நாடுகள் நிதி உதவித் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியில் ஐந்து நுண்கருத் திட்டங்கள் புனரமைக்கப்பட்டு நாளை மறுதினம் திறந்து வைக்கப்படவுள்ளது.

★ சாவற்காடு ஆரம்ப சுகாதார நிலையம்.

★ மானிப்பாய் மரவேலைப் பாடசாலை.

★ கட்டுடை பலநோக்கு சனசமூக நிலையம்.

★ சண்டிலிப்பாய் பலநோக்கு சனசமூக நிலையம்.

★ பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்.

ஆகியனவே நாளை மறுதினம் செவ்வாய் காலை 10 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளன.

இவ் வைபவத்திற்கு பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனும், சிறப்பு விருந்தினர்களாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனப் பிரதிநிதிகள், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகம், கச்சேரி திட்டமிடல் பணிப்பாளர் கே. பாலகிருஷ்ணன், சண்டிலிப்பாய் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வே. கனகரத்தினம் மற்றும் பிரதேச செயலக தொழில் நுட்ப உத்தியோகத்தர்களும் கலந்து கொள்வர். (ஐ-72)

## தவக்காலச் சிந்தனை - 6

இவ்வுலக வாழ்வின் பரிசாக அருளப்படுவதே மோட்ச வாழ்வும், நரக வாழ்வுமாகும். நாம் எதனை விதைக்கின்றோமோ அதனையே அறுக்க முடியும். எமக்குத் தண்டனை வருவிப்பவர்களும் மகிழ்ச்சியை வருவிப்பவர்களும் நாங்களே. எம்முடைய முகத்தைக் கண்ணாடியில் பார்க்கும் போது அது எம்மையே காட்டும் மற்றவர்களின் முகங்களையல்ல.

நாம் செய்யாத ஒன்றை எதிர்பார்க்க முடியாது; நாம் கொடுக்காத ஒன்றைப் பெற்றுக் கொள்ளவும் முடியாது. உலக வழக்கிற்கும் இது பொருந்தும். ஆனால் இன்று முரண்பாடாகவே சிந்திக்கின்றோம்; முரண்பாடாகவே செயற்படுகின்றோம். விதைக்காததை அறுக்க நினைக்கின்றோம். கொடுக்காமலே பெற்றுக் கொள்ள விளைகின்றோம். மன்னிப்பின் மேன்மையை விளக்க இயேசு இப்படிக் கூறுகின்றார். ''நீ மண்ணகத்தில் எதெல்லாம் கட்டுவாயோ அது விண்ணகத்திலும் கட்டப்படும்; எதெல்லாம் மண்ணகத்தில் அவிழ்ப்பாயோ அதெல்லாம் விண்ணகத்திலும் அவிழ்க்கப்பட்டதாகவே இருக்கும். (மத்:16:19) எனவே மன்னிப்பைக் கொடுத்து.மன்னிப்பைப் பெற்றுக் கொள்வோம் தவக்காலம் வழி சமைக்கட்டும்.

- அன்ரனி பீற்றர் -

## பதவி உயர்வு

தென்மராட்சி, பெப். 22

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கரம்பன் கிழக்கு கிராம அலுவலர் க. சகாதேவன், புளியங்கூடல் பிரிவு கிராம அலுவலர் மு. விஜயரத்தினம் ஆகியோர் தரம் 1 கிராம அலுவலர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

கடந்த வருடம் இடம் பெற்ற தரம் 1 பதவி உயர்வுப் பரீட்சையில் சித்திபெற்றதையடுத்து இவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

(ஐ-117)

### மதத்தால், இடத்தால் வேறுபடினும்

# தமிழைப் பேணிப் பாதுகாப்போர் அனைவரும் பாராட்டுக்கு உரியவரே

### கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி செய்தி

யாழ்ப்பாணம், பெப். 22

எமது தாய் மொழியை யார் யார் பேணிப் பாதுகாக்கிறார்களோ அவர்களைப் பாராட்டுக்குரியவர்களாக மதிப்பது பெருங்கடனாகும்.

அவர்கள் மதத்தினாலோ, இனத்தினாலோ, இடத்தினேலோவேறுபட்டிருக்கலாம். ஆனால் தமிழ்ப் பற்றினால் தமிழ் அபிமானத்தினால் அவர்கள் அனைவரும்பாராட்டுக்குரியவர்களே.

இவ்வாறு கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கொழும்புத் தமிழ்ச்சங்கம் பண்டிதர், புலவர், வித்துவான் ஆகியோரைக் கௌரவித்துக் கொழும்பில் விழா எடுப்பது குறித்து பிரஸ்தாப சங்கத்துக்கு அனுப்பிய செய்தி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அச் செய்தி வருமாறு:—

தமிழறிஞர்களையும் புரவலர்களையும் தகுதியறிந்து காலத்துக்குக் காலம் கௌரவித்து வரும் பணியை நல்லபடிஆற்றிவருவதுகொழும்புத் தமிழ்ச் சங்கமாகும். இச்சங்கத்தில் கடந்த காலங்களில் கடமை புரிந்த ஆர்வலர்களையும் அறிஞர்களையும் நான் நன்கு அறிவேன். 40 ஆண்டுகளுக்கு மேலாக இச்சங்கத்தோடு தொடர்பு கொண்ட பேறு எனக்கு உண்டு.

இன்றும் தமிழ்ச் சங்கத்தை நல்லபடி ஆக்கபூர்வமாக வளர்த்து வரும் பேரறிஞர்களை நான் பாராட்டு [illegible] வர். இ[illegible] கள் எங்கள் அபிமானத்துக்கும் பேரன்புக்கும் மதிப்புக்குமுரியவர் அன்னாரின் தலைமையின் கீழ் இன்று பண்டிதர்கள், புலவர்கள், வித்துவான்கள் கௌரவிக்கப்படுவது மிகவும் வரவேற்கத்தக்கது.

எமது தாய் மொழியை யார் யார் பேணிப் பாதுகாக்கிறார்களோ அவர்களை பாராட்டுக்குரியவர்களாக மதிப்பது பெருங்கடனாகும். அவர்கள் மதத்தினாலோ. இனத்தினாலோ, இடத்தினாலோ வேறுபட்டிருக்கலாம்! ஆனால் தமிழ்ப் பற்றினால், தமிழ் அபிமானத்தினால் அவர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்களே.

இன்று கனடாவிலே தமிழ்ச் சங்கம், அவுஸ்திரேலியாவிலே தமிழ்ச் சங்கம், இலண்டனிலே தமிழ்ச் சங்கம், மேற்கு ஐரோப்பிய நாடுகளிலே தமிழ்ச் சங்கங்கள் என்று உலகமெங்கும் தமிழ்ச் சங்கங்கள் உதயமாகி எமது மொழிக்கு ஏற்றம் கொடுத்து வருவது அனைவரும் அறிந்ததே.

தலைநகரில் கடந்த பல ஆண்டுகளாகத் தமிழ் வளர்க்கும் நிறுவனமாக விளங்கும் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தையும் அதில் அங்கம் வகிக்கும் ஆர்வலர்களையும் பாராட்டி மேலும் மேலும் எமக்கு உறுதியளிக்கும ஆக்கபூர்வமான நற்பணிகளை இச்சங்கத்தின் மூலம் ஆற்ற வேண்டுமென்று திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

என்னையும் தங்கள் மேலான கணிப்பில் ஒருவராக மதித்துக் கௌரவித்தமைக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். — என்பதாகும்

(அ)

## உடன் தேவை

கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு உழவு இயந்திரம் ஒன்று பெட்டியுடன் கொள்வனவு செய்ய இருப்பதால் 135 தரம் 36 ஸ்ரீ கொண்ட உழவு இயந்திரம் விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் கீழ்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

28.02-1999 -க்கு முன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

பொது முகாமையாளர்,
கரவெட்டி, பனை, தென்னைவள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

(63325)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஆண்டு 6 புதிய பாடத் திட்ட கணிதம் முதல் 14 பாடங்கள், P/ Stat ரூபா 100 தொடர்பு: T. ரவீந்திர ராசா, No. 6, யுபிலி பசார், மின்சாரநிலைய வீதி, யாழ்ப் பாணம். (63249)

விவசாயிகளுக்குத் தேவை யான கத்தரி, மிளகாய் நாற் றுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். அற வழிப் போராட்டக்குழு, 29, கைதடி நுணாவில், சாவகச் சேரி. [63304]

### தேவை

நல்ல நிலைமையிலுள்ள தமிழ்த் தட்டச்சு இயந்திரம் தேவையாகவுள்ளது. விற்ப னைக்கு வைத்திருப்பவர்கள் எம்முடன் தொடர்பு கொள் ளவும். அறவழிப் போராட் டக்குழு, 29, கைதடி நுணாவில், சாவகச்சேரி. [63305]

### காணவில்லை

பசு மாடு சிந்து டாப்பல் கலப்பு இனம், நிறம் செங் காரி, அடையாளம் பட்டி பார்த்த கொம்பு, ஒரு ஈற்று ஈன்ற மாடு, வாலின் கூந் தல் கறுப்பு, அழகான தோற் றமுடைய மாடு 15. 02. 99 முதல் காணவில்லை. கண்ட வர்கள் நா. குமரகுருபரன் [காந்தி], இல. 2, சங்கிலியன் வீதி, நல்லூர் என்ற முகவரி யுடன் தொடர்பு கொள்ள வும். சன்மானம் வழங்கப் படும். [63310]

## மாணவருக்கு கொப்பிகள் அன்பளிப்பு

கோப்பாய், பெப். 22

ஆவரங்கால் மகாஜன வித்தியாலய வறிய மாண வர்களுக்கு அப்பியாசப் புத்த கங்களை கொழும்பு இராம கிருஷ்ணமிசன் வழங்கியது

அதி வணக்கத்துக்குரிய சுவாமி ஆத்மகானந்தராஜ் அவர்களால் அனுப்பி வைக் கப்பட்ட மேற்படி அப்பி யாசப் புத்தகங்கள் தரம் 5, 6, 7, 8 லகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கடந்த 17 ஆம் திகதி பாட சாலையில் வைத்து வழங்கப் பட்டன. (ஐ-72)


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய் கள், வலிப்புநோய், பீனி சம், தலையிடி, தலை கால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழி தல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரி யக் குறைவு, மூலவியாதி கள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப் படுத்துபவர்

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்,
121, 2 ஆம்
குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்
தொலைபேசி எண் 2459
(62737)


# புன்னாலைக்கட்டுவன் பகுதியில்

# தோட்டங்களில் இரவுத் திருட்டுக்கள்

## தொடர்ந்துநடப்பதால்விவசாயிகள் பாதிப்பு

புன்னாலைக்கட்டுவன், பெப். 22

புன்னாலைக் கட்டுவன், ஈவினைப் பகுதிகளில் உள்ள தோட்டங்களில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள் ளன.

கடந்த இரண்டு நாள் களாகத் தொடர்ச்சியாகப் பெய்த மழையினைச் சாதக மாகப் பயன்படுத்திய திரு டர்கள் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் உள்ள துரைராஜா என்பவரது வெற்றிலைத் தோட்டத்தில் 3ஆயிரம் வெற் றிலைகளைத் திருடியதோடு வெற்றிலைக் கொழுந்துகளை யும் துவம்சம் செய்துள்ளனர்.

அன்றைய இரவு ஈவினைப் பகுதியில் உள்ள இரண்டு தோட்டங்களில் உருளைக் கிழங்குகள் திருடப்பட்டுள் ளன. அத்துடன் மயிலங்காட் டுப் பகுதியில் உள்ள தோட் டம் ஒன்றில் இருந்து கோவா மற்றும் தேங்காய்கள் திருட் டுப் போயுள்ளன.

கடும் மழை மற்றும் ஊர டங்கு நேரங்களில் இச் சம்ப வங்கள் இடம் பெறுவதால் இப்பகுதியில் உள்ள விவசாயி கள் பெரும் நஷ்டத்தை எதிர் நோக்கியுள்ளனர். (க-133)

## குண்டுங் குழியுமாக உள்ள

# ஈவினை வீதியில் போக்குவரத்து சிரமம்

புன்னாலைக்கட்டுவன் வடக்கு சந்தியில் இருந்து ஈவினை ஊடாக 'மஸ்கன்' தொழிற்சாலைக்குச் செல் லும் பாதை திருத்தப்படா மல் குண்டுங் குழியுமாக இருப்பதால் இப்பாதையால் செல்லும் பயணிகள் குறிப் பாக விவசாயிகள் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே தமது உற்பத்திப் பொருள் களைச் சந்தைக்கு எடுத்துச் செல்கின்றனர்.

கடந்த வாரம் இப்பாதை யால் பயணம் செய்த கிடுகு வண்டில் ஒன்றின் அச்சு முறிந்துள்ளது. அத்துடன் உழவு இயந்திரம் ஒன்றும் காற்றுப்போய் பயணத்தைத் தொடரமுடியாமல் தரித்து நின்றதைக் காணக்கூடியதாக இருந்தது. (க-133)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 03 - 01- 1918

மறைவு 21 - 01 -1999

### திருமதி நமசிவாயம் அன்னப்பிள்ளை

எங்கள் அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தி அடைய
எல்லாம் வல்ல விநாயகரையும்
முருகனையும் வேண்டி நிற்கின்றோம்.

இன்று (22/02/99) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனை வரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சி. லிங்கமயம்
[பேறாமகன்]
பிள்ளையார் கோயிலடி,
சித்தங்கேணி.

[63323]

## திடீர் மழையினால்

# மிளகாய், வெங்காயச் செய்கையும் பாதிப்பு

புன்னாலைக்கட்டுவன், பெப். 22

கடந்த வெள்ளிக்கிழமை பெய்த கடும் மழையினால் புன்னாலைக்கட்டுவன் பகுதி யில் வெங்காயம் மற்றும் மிள காய்ச் செய்கையாளர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரி வித்துள்ளனர்.

அறுவடை செய்யப்பட்டு பிடிகாய்களாக அடுக்கி வைக் கப்பட்ட வெங்காயம் மழை யினால் பழுதடைந்துள்ளது. அத்துடன் காற்றுடனான மழையினால் மிளகாய்ச் செடிகளில் உள்ள பூக்கள் உதிர்ந்துள்ளன.

தற்போது அதி உச்ச விலை யில் மிளகாய் விற்கப்படும் போது இத்தகைய அழிவு விவசாயிகளை கவலைக்குள் ளாக்கியுள்ளது. (ஐ-133)

## கூட்டுறவுத்துறை நியமனம்:

# ஊழியர் ஆணைக்குழுவின் சிபார்சு இனி அவசியம்

யாழ். மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டு றவுச்சங்கங்களில் பணியாளர் நியமனம் சம்பந்தமான சகல நடவடிக்கைகளையும் வடக்கு — கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் சிபார்சுடனேயே மேற்கொள்ளவுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களில் பணியாளர்களை யாழ். மாவட்டக் கூட்டுறவுத் திணைக்களத்தின் சிபார்சுட னேயே நியமிப்பது வழக்கம்.

தற்போது இந் நடை முறையைக் கூட்டுறவுத் திணைக்களம் வடக்கு — கிழக்கு கூட்டுறவு ஊழி யர் ஆணைக்குழுவிடம் ஒப்ப டைத்திருப்பதாகத் திணைக் கள வட்டாரங்கள் தெரிவித் தன. (ஐ-17)

# பாடசாலை வேளையில் கல்வி அலுவலகம் வராதீர்

## ஆசிரியர்களுக்குப் பணிப்பு

வடமராட்சி, பெப். 22

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் கற்பிக்கும் அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலை நேரத்தில் வலய அலுவலகத்துக்கு வரக்கூடா தென வடமராட்சிக் கல்வி வலயப் பணிப்பாளர் சி. சிவ ராசா அறிவுறுத்தி உள்ளார்.

ஏதாவது அலுவல்கள் இருப்பின் பிரதி திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள் களில் பாடசாலை நேரம் தவிர்ந்த வேளைகளில் மாத் திரம் வந்து செல்ல வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

சில அதிபர்கள், ஆசிரியர் கள் பாடசாலை வேளை களில் வெளியே நடமாடுவதா கக் கிடைத்த புகார்களைத் தொடர்ந்தே இப்புதிய நடை முறை அமுல்படுத்தப்படுவ தாகவும் அவர் மேலும் தெரி வித்தார். (ஐ-173)

# மண்வெட்டிகளுக்கு பிடிகள் வரவில்லை

புன்னாலைக்கட்டுவன், பெப். 22

யாழ். குடாநாட்டில் விவ சாயிகளுக்கு என வழங்கப் பட்ட மண்வெட்டி அலகு களைப் பயன்படுத்த முடி யாமல் உள்ளதாக விவசாயி கள் விசனம் தெரிவித்துள்ள னர்.

மண்வெட்டி அலகுகள் வழங்கப்பட்டு 4 மாதங்கள் ஆகிவிட்ட நிலையிலும் மண் வெட்டிகளுக்கான பிடிகள் இதுவரை வழங்கப்பட வில்லை. இதனால் மண் வெட்டிகளைப் பயன்படுத்த முடியாத நிலையில் விவசாயி கள் உள்ளனர்.

இது விடயம் தொடர்பாக விவசாயத் திணைக்கள அதி காரிகளுடன் தொடர்பு கொண்ட போது மண்வெட் டிப் பிடிகளைத் தருவிப்பது தற்போது சிரமமாகவுள்ளது எனினும் கூடிய விரைவில் கொழும்பில் இருந்து அவற் றைப் பெற்று வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர். (ஐ-133)


EL 2U
EL 3U
ESL F TYPE
ESL GLOBE

NIPPON EL - 2u MODEL
5 W = 25 W
7 W = 35 W
9 W = 40 W
11 W = 60 W
13 W = 75 W
15 W = 80 W

NIPPON EL - 3u MODEL
15 W = 80 W
18 W = 85 W
20 W = 100 W
24 W = 120 W

NIPPON ESL MODEL
9 W = 40 W
11 W = 60 W
13 W = 60 W
18 W = 85 W

கலர் பல்புகளும் உண்டு

நிப்போன் தயாரிப்புகள்
உங்களுடைய பணத்தினை பெறுமதியாக்குங்கள்
குறைந்த விலைகளில், கூடிய வகைகளில்
நிப்போன்
மின் சக்தியை சேமிக்கும் பல்புகள்
COMPACT SIZE
மின்சக்தியின் அடிப்படையில் பணத்தினை சேமியுங்கள் அத்துடன் விலையின் அடிப்படையில் அது சிறந்தது
12 மாதங்கள் உத்தரவாதமுடையது 12 மாதங்களுக்கிடையில் பல்புகளை இலவசமாக பழுதுபார்க்கப்படும்
NIPPON ENERGY SAVING BULBS ARE NOW REPAIRABLE
24 Hours a day will cost you only =/86 cts, SAVE 80%
SPECIAL DISCOUNTS FOR PURCHASES OF 50 BULBS OR MORE
LANKA NIPPON
18, Keyzer Street, Colombo 11.
Tel: 320961, 335301, 437735, 324726
10, Trelawny Place, (Behind Milk Bar)
Bambalapitiya Junction, Colombo 4. Tel: 589992
Insist on "NIPPON" Guarantee Card
AVAILABLE ISLANDWIDE
"NIPPON" The Guaranteed Product
NIPPON ENERGY SAVER NIPPON ENERGY SAVER NIPPON ENERGY SAVER
(சி/6491)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் கடமையில் ஈடுபடும் ஊழியருக்கு விசேட சலுகை

## உயிரிழப்புக்கு ரூபா 3 லட்சம் நஷ்டஈடு

கொழும்பு, பெப். 22

எதிர்வரும் மாகாண சபைகளுக்கான தேர்தல கடமைகளில் ஈடுபடவுள்ள அதிகாரிகளுக்கு விசேட நட்ட ஈடு வழங்கும் முறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் சமயங்களில் இடம் பெறும்வன்செயல்கள் காரணமாக தேர்தல் கடமைகளில் ஈடுபட அரசாங்க ஊழியர்கள் பின்னடிப்பதால் இப்புதிய நஷ்ட ஈட்டு முறை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரச ஊழியர்களுக்கு வழமையான கடமைகளின்போது ஏற்படும் நிகழ்வுகளுக்காக வழங்கப்படும நஷ்' ஈட்டிலும் பார்க்க இந்தப் புதிய திட்டத்தின் கீழ் அதிக நஷ்ட ஈடு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் க'_மையின் போது ஏற்படும் வன்செயலால் ஓர் ஊழியர்தனதுசேவைக் காலத்தில் தொடர்ந்து பணியாற்ற முடியாத நிலைஏற்படின் அல்லது மரணமடைய நேரிடின் நஷ்ட ஈடாக 3 லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-10)

## தெல்லிப்பழை

# புற்றுநோய் ஆஸ்பத்திரி இயங்கும் சாத்தியமில்லை

யாழ்ப்பாணம், பெப். 22

தெல்லிப்பழையிலுள்ள புற்றுநோய் ஆஸ்பத்திரியை மீண்டும் இயங்க வைப்பதற்கான முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆஸ்பத்திரி அமைந்துள்ள பிரதேசம் அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருப்பதால் இக்கட்டடத்தை திறந்து ஆஸ்பத்திரியை இயங்கச் செய்வதற்கு படையினர் தரப்பில் தொடர்ந்து மறுப்புத் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இந்த ஆஸ்பத்திரியைத் திறப்பது தொடர்பாக சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் வடமாகாணமீள் குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபைத் தலைவர் என். ஒபடகேயை யாழ். செயலகத்தில் சந்தித்து வலியுறுத்தினார்கள்.

இக கட்டடம் தற்பொழுது படையினர் வசமுள்ளதால் அதனை மீளப் பெற முடியாதுள்ளது எனவும் —

இதற்கெ" ஒரு புதிய கட்டடத்தை அமைப்பதற்கு தம்மால் நிதி ஒதுக்கீடு செய்து தர முடியுமெனவும் ஒபடகே தெரிவித்தார்.

புதிய கட்டடம் அமைக்கப் பட்டதும் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு மகரகம ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ள புற்றுநோய் சிகிச்சைக்குரிய கோபோல்ற் இயந்திரங்களையும் மீளப் பெற்றுத்தர முடியும் என்றும் அவர் கூறினார்.

(இ-5)

# மட்டு. மாவட்டத்தில் பாதுகாப்பு உஷார்!

கொழும்பு, பெப். 22

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓரளவு தளர்த்தப்பட்டிருந்த பாதுகாப்பு நடைமுறைகள் மீண்டும் இறுக்கமான நிலைக்கு வந்துள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொள்ளலாம் எனக் கிடைத்த புலனாய்வுத் தகவலையடுத்தே பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

இதேவேளை—

நகரிலும், நகர்ப்புறங்களிலும் திடீர்ச் சோதனைகளில் பொலீஸாரும் இராணுவத்தினரும் தனித்தனியே ஈடுபட்டு வருவதைக் காணமுடிகிறது. கடந்த வெள்ளி மட்டக்களப்பு திருமலை வீதியில் இராணுவத்தினர் திடீர்ச் சோதனைகளை மேற்கொண்டபோது அடை_யாள அட்டை இன்றிச் சென்ற மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மாணவன் ஒருவன் உட்படப் பலர் கைதாகி விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுப் பின் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இப் பாதுகாப்புக் கெடுபிடிகளால் மக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. (ஐ-10)

## இம்மாத இறுதிக்குள்

# ச. ச. நிலையங்களின் புதிய நிர்வாகத் தெரிவு

யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து சனசமூக நிலையங்களினதும் வருடாந்தப் பொதுக் கூட்டங்களை இம் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் கூட்டி புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்யுமாறு யாழ். உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலக தலைமைச் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி த. பாஸ்கரன் அறிவுறுத்தியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட திகதிக்குள் தெரிவு செய்யப்படும் புதிய நிர்வாகிகளின் பட்டியல்களை பிரதேச செயலர்களுக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

[ஐ 5 – 30]

# மைசூர்ப்பருப்பு என்ற பெயரில் குதிரை உணவு

## வர்த்தகருக்கு அபராதம்

கொழும்பு, பெப். 22

நச்சுத் தன்மை உள்ள பருப்பை இறக்குமதி செய்து அதனை நாடெங்கும் விற்பனை செய்த புறக்கோட்டையைச் சேர்ந்த கோடீஸ்வர வர்த்தகர் ஒருவருக்கு சுங்கத் திணைக்களம் 20 லட்சம் ரூபா அபராதம் விதித்தது.

ஆஸ்திரேலியாவிலுள்ள அடிலெய்ட் நகரிலிருந்து பல வருடங்களாக மைசூர் பருப்பு என்ற பெயரில் குதிரைகளுக்கு உணவாக வழங்கப்படும் தானிய வகை ஒன்றை இறக்குமதி செய்து வந்த இந்த வர்த்தகர் சுங்கத் திணைக்களத்தினரின் கண்களில் மண்ணைத் தூவி புறக்கோட்டையில் இதனை விற்று வந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் கடந்த வருட மத்தியில் சுங்க அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சோதனையின்போது இந்த வகை பருப்பு அடங்கிய பல கொள்கலன்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த வர்த்தகருக்கு 2 கோடி 40 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இருப்பினும் வர்த்தகர் மேற்கொண்ட மேன்முறையீட்டை அடுத்து அபராதம் 20 லட்சம் ரூபாவாக குறைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-10)

## யாழ்ப்பாணக் கல்லூரியில் சாரணர் தினம்

வலி. தென்மேற்கு. பெப். 22

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் சாரணர் ஸ்தாபகர் தினமும் அமரர் க. சச்சிதானந்தன் (சச்சி) நினைவு நிகழ்வும் கடந்த வியாழக்கிழமை ஒட்லி மண்டபத்தில் இடம் பெற்றன.

கல்லூரி நிர்வாக மண்டபத்தில இருந்து விருந்தினர்கள் சாரணர் அணிவகுப்பு மரியாதையுடன் ஒட்லி மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

கல்லூரி சாரணர் தலைவர் ம. சசிதரன் தலைமையில் இடம்பெற்ற விழாவில் யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வர் ஜி இராஜநாயகம் கல்லூரியின் கொடியையும், பிரதம விருந்தினர் க. செல்வராஜா துருப்புக் கொடியையும், மாவட்ட உதவி ஆணையாளரும் சிறப்பு விருந்தினருமான சு. ஏகாம்பரநாதன் மாவட்டக் கொடியையும் ஏற்றிவைத்து விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

(ஐ-185)

## நெற்செய்கை அழிவு:

# விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்க முன் முயற்சி

வலி. தென்மேற்கு பெப் 22

வெள்ளம் மற்றும் வரட்சியால் பாதிக்கப்பட்ட நெற்செய்கை விவசாயிகளுக்கு நஷ்ட ஈட்டு நிவாரணம் வழங்க வலி. தென்மேற்கு பிரதேச செயலர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

மேற்படி இயற்கை அழிவினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கிராம அலுவலர்கள் ஊடாக சமூக சேவைகள் திணைக்களத்தின் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மானிப்பாய் மேற்கு, நவாலி மற்றும் ஆனைக்கோட்டை விவசாய சமமேளனங்கள் நஷ்ட ஈட்டு நிவாரணம் கோரி ஏற்கனவே விண்ணப்பித்திருந்தது தெரிந்ததே.

இதேவேளை —

தற்போது பெய்து வரும் கடும் மழையினால் வலி. தென்மேற்குப் பகுதியைச் சேர்ந்த சகல நெற்செய்கை விவசாயிகளும் பாதிப்படைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

[ஐ-185]

# பெண் இராணுவ அணிக்கு கட்டளை அதிகாரி ஆண்!

கொழும்பு, பெப். 22

சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த பெண் ராணுவப் படைப் பிரிவிற்கு (றெஜிமென்ட்) ஆண் கட்டளை அதிகாரிகளை நியமிக்க சிறிலங்கா இராணுவம் நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை பெண் படைப்பிரிவுக்கு பெண் கட்டளை அதிகாரிகளையே நியமிப்பது வழக்கத்தில் இருந்து வந்தது.

கட்டளை அதிகாரிகளாக ஆண் அதிகாரிகள் நியமிக்கப்படுவதால் பெண் அதிகாரிகளுக்கு பதவி உயர்வுகளைப் பெறும் வாய்ப்புக்கள் அருகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விரைவில் அமைக்கப்படவுள்ள 4 ஆவது மற்றும் 5 ஆவது பெண் (தொண்டர்) படைப்பிரிவுகளுக்கே ஆண் அதிகாரிகள் கட்டளை அதிகாரிகளாக நியமிக்கப்படவுள்ளனர்.

4 ஆவது பெண் (தொண்டர்) படைப்பிரிவு யாழ்ப்பாணத்திலும் 5 ஆவது பெண் (தொண்டர்) படைப்பிரிவு திருகோணமலையிலும் அமைக்கப்படவுள்ளன. இதன்படி இந்தப் படைப் பிரிவுகள் இராணுவ நடவடிக்கைப் பிரதேசங்களில் சேவையில் ஈடுபட வேண்டியிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-10)

# வாக்காளர் பதிவு எங்கே பெறுவது?

## பரீட்சார்த்திகள் குழப்பம்

மாகாண அரசாங்க சேவையில் பொது எழுதுவினைஞர், சிறாப்பர், களஞ்சியக்காப்பாளர், கணக்குப்பதியுநர் ஆகிய பதவிகளுக்கு மார்ச் மாத முற்பகுதியில் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சையின் போது வாக்காளர் இடாப்புப்பத்திரத்தின் மூலப் பிரதியைச் சமர்ப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளது

ஆனால் யாழ்ப்பாணச் செயலக தேர்தல் காரியாலயத்தில் மேற்படி மூலப்பிரதியைப்பெற முடியாத நிலையில் பரீட்சார்த்திகள் உள்ளனர்.

இதனால் பரீட்சார்த்திகள் என்ன செய்வதென்று தெரியாமல் பெரிதும் குழப்பமடைந்துள்ளனர்.

உரிய அதிகாரிகள் நிலைமையைத் தெளிவுபடுத்துவார்களா என அவர்கள் எதிர் பார்த்துள்ளனர். (ஐ-110)

# ஊழியர் சேமலாபநிதி பெறாதோரை ஆவணங்களுடன் வருமாறு அழைப்பு

## தொழில் ஆணையாளரை சந்திக்க ஏற்பாடு

அரியாலை, பெப். 22

ஊழியர் சேமலாப நிதி மீளளிப்புக் கொடுபனவுக்கு விண்ணப்பித்தும் இதுவரை கிடைக்கப் பெறாதவர்கள் யாழ். உதவித் தொழில் ஆணையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அரச திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச்சங்கங்கள், தனியார் நிறுவனங்கள் போன்றவற்றில் கடமையாற்றியோரில் ஊழியர் சேமநிதிக்கு விண்ணப்பித்து இதுவரை அதனைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்போர் தகுந்த ஆதாரங்களுடன் பிரதி புதன்கிழமை தோறும் சிறாம்பியடி லேனில் உள்ள யாழ். உதவி தொழில் ஆணையாளரைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொழில் ஆணையாளரிடம் இருந்தோ அல்லது மத்திய வங்கி ஊழியர் சேமநிதி அதிகாரியிடம் இருந்தோ பெற்றுக்கொண்ட ஆவணங்களை உடன் எடுத்துவருமாறும் உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

(ஐ-17-173)

# கொழும்பு பல்கலைக்கு பெண் துணைவேந்தர்!

கொழும்பு, பெப் 22

சிறிலங்காவிலுள்ள பல்கலைக்கழகங்களின் வரலாற்றில் முதன் முதலாகப் பெண் ஒருவர் பல்கலைக்கழகத்துணை வேந்தராக நியமிக்கப்படவுள்ளார்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவே பெண் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார். கொழும்புப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பதவிக்கு அந்தப் பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தைச் சேர்ந்த பேராசிரியை சாவித்திரி குணசேகரா, சட்ட பீடாதிபதி பேராசிரியை ஷர்யா டி. சொயிசா மற்றும் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியை எச். அபேநாயகா ஆகிய பெண்களின் பெயர்கள் பல்கலைக்கழக நிர்வாக சபையினால் பல்கலைக்கழக மானிய குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மானியக் குழு இவர்களின் பெயர்களை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கும். அதன் பின்னரே துணை வேந்தர் பதவிக்கு ஒருவர் நியமிக்கப்படுவார்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் [illegible] அடுத்த மாதத்திலிருந்து ஓய்வுபெறவுள்ளார். இந் நிலையில் இப் பல்கலைக்கழகத்தின் அடுத்த துணை வேந்தராக பெண் ஒருவரே நியமிக்கப்படுவார் என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது. (ஐ-10)

# சிறுவர் கூடம்

கொழும்புத்துறை பெப் 22

யாழ். கொட்டடி முத்தமிழ் கலாமன்ற சிறுவர் கூடம் தற்பொழுது இயங்கி வருகின்றது.

[ஐ-30]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு போதிய நிதி ஒதுக்கீடு இல்லை

## வேலைத் திட்டங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப். 22 வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால் சபையினால் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத்திட்டங்களைத் தொடர்ந்து செய்ய முடியாத நிலை ஏட்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

சபையினால் 80 சத வீதமான வீதிகள் திருத்தப்பட்டுள்ளதுடன் மேலும் பல வீதிகள், கல்வெட்டுகள், மதகுகள் போன்ற வேலைகளையும் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நிதி ஒதுக்கீடு செய்யப்படாமையினால் இந்த வேலைகளை இடைநிறுத்தம் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது,

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த வடமாகாண மீள் குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபைத் தலைவர் என். ஒபடகேயுடன் வீதி அபிவிருததி அதிகார சபையின் மாகாண பணிப்பாளர் எஸ். ஐ. ஆர். குரூஸ் இது தொடர்பாக பேச்சு நடத்திய போதும் நிதி ஒதுக்கீடு குறித்துத் திருப்தியான முடிவு எதுவும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

வீதி அபிவிருத்தி அதிகார சடையினால் 1998 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட வேலைகளுக்கும் 99 ஆம் ஆண்டில் செய்யப்படவேண்டிய வேலைகளுக்கும் 10 கோடி 90 லட்சம் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிதி குறித்து யாழ். அரச அதிபர் ஊடாக வடமாகாண மீள்குடியேற்றப் புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபைக்கு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை அண்மையில் கடிதமொன்றை அனுப்பி வைத்ததும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## 'சீநோர்' கட்டட திருத்த வேலைகள்

யாழ்ப்பாணம், பெப். 22 குருநகரிலுள்ள சீநோர் தொழிற்சாலையின் திருத்த வேலைகள் மே மாதத்துக்கு முன்னர் முடிவடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கட்டட வேலைகள் தற்பொழுது கட்டடத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதே வேளை —

இத்தொழிற்சாலைக்கென இயந்திரங்கள் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

## கூட்டுறவுத் திணைக்களத்தில் ஆளணிப் பற்றாக்குறை

அரியாலை, பெப். 22 யாழ். மாவட்ட கூட்டுறவுத் திணைக்களத்தில் போதிய ஆளணி வசதி பற்றாக்குறையாகவுள்ளதால் கூட்டுறவுச் சங்கக்கிளைகளில் பொருள்களின் விலை அதிகரித்து விற்பனை செய்யப்படுவதையும் மற்றும் முறைகேடுகளையும் கண்காணிக்க முடியாதுள்ளது.

இவ்வாறு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் தெரிவித்தார்.

கப்பல் மூலம் தருவிக்கப்படும் அத்தியாவசியப் பொருள்கள் விலை நிர்ணயம் செய்யப்பட்டே கூட்டுறவுச் சங்கத்துக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

சில கூட்டுறவுச் சங்கங்கள் நிர்ணய விலையையும் மீறி பொருள்களின் விலையை அதிகரித்து விற்பனை செய்து வருவதாகத் தெரியவந்துளளது.

இவற்றைக் கண்டுபிடித்துக் கட்டுப்படுத்தவும் முறைகேடுகளைக் கண்காணிக்கவும் திணைக்களத்தில் போதிய ஆளணி வசதி கிடையாது.

ஆகவே முறைகேடாக செயற்படும் சங்கங்களைக் கட்டுப்படுத்தபொதுமக்களின் உதவியே அவசியமாகும்.

இவ்வாறு செயற்படும் சங்கங்களையும், கிளைகளையும் தமக்குத் தெரியப்படுத்துமாறு உதவி ஆணையாளர் மேலும் கேட்டுள்ளார். (ஐ-17)

---

சாவகச்சேரி பிரதேச சபை

## அறிவித்தல்

11-02-99 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 09-02-99 ஆம் திகதிய வேலைகள் சம்பந்தமான கேள்வி அறிவித்தல் விளம்பரம் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.

**அன்ரன் பொன்னையா,**
தலைவர்,
சாவகச்சேரி பிரதேச சபை.

சாவகச்சேரி பிரதேச சபை,
கொடிகாமம், (சி-6563)

---

## 45-ம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 07 | 09 |
| — | — |
| 11 | 01 |
| — | — |
| 1963 | 1999 |

அமரர்

### இராமலிங்கம் சிவபாதம்

திதி: 22 — 02 — 1999

அன்னாரின் சிரார்த்த தினம் எமது இல்லத்தில் நடைபெறும்.

உந்தன் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கும்:
**அன்பு அப்பா, அம்மா,**
**சகோதரன், சகோதரிகள். மாமா,**
**சிறிய தகப்பன், சிறியதாய்,**
**உற்றார், உறவினர்.**

கைதடி தெற்கு,
கைதடி. (63133)

---

## இடம்பெயர்ந்தோர் நிவாரணம்

அரியாலை, பெப். 22 யாழ். பிரதேச செயலர் பிரிவில இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவு முத்திரையின் 71 ஆவது ஏ. பி. ஆகியபுள்ளிகளுக்கு இவ்வாரம் முதல் பொருள்கள் விநியோகிக்கப்பட உள்ளன.

இந்த முத்திரைப் புள்ளிக்கு பொருள்களை வழங்குவதற்காக யாழ். பலநோக்குக் கூட்டுறவுச சங்கம் சங்கக் கிளைகளுக்கு பொருள்களை அனுப்பி வருகின்றது.

அரிசி, சீனி, பருப்பு ஹைலன்ட் பால்மா ஆகிய பொருள்கள் இம்முறை நிவாரணத்திற்கு வழங்கப்படும் என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-17)

## கூட்டுறவு மாநாடு

அரியாலை, பெப். 22 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் பொது முகாமையாளர்களுக்கான மாதாந்த மாநாடு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அலுவலகத்தில் நடைபெறும். (ஐ-17)

## விவேகானந்த பாலர் பாடசாலை

வடமராட்சி, பெப். 22 கெருடாவில் விவேகானந்தா சனசமூக நிலையத்தினால் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட விவேகானந்த பாலர் பாடசாலைத் திறப்பு விழா நிலையத் தலைவர் கே. வி. பரமானந்தம் தலைமையில் நடைபெற்றது.

சர்வோதய யாழ். மாவட்ட வெளிக்கள உத்தியோகத்தர் [illegible] சாலையைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். (ஐ-173)

---

## கே. கே. எஸ். வீதி வழியான பாடசாலைச் சேவைக்கு மேலும் ஒரு பஸ்

காங்கேசன்துறை வீதியில் பாடசாலைச் சேவைக்காக மேலும் ஒரு பஸ் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் நெருக்கடியின்றிப் பயணம் செய்ய முடிகிறது.

இதுவரை ஒரு பஸ் மட்டுமே சேவையில் ஈடுபட்டதனால் மாணவர்களும் மாணவிகளும் ஒரே பஸ்ஸைப் பயன்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. (ஐ-154)

---

## இதய அஞ்சலி

அமரர்

### கனகரட்ணம் முருகேசு

(உரிமையாளர், அம்பாள்பார்மசி, சாவகச்சேரி.)

அவர்கள் அமரத்துவம் எய்தியமையால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபததைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வீடியோ கலா மினி,**
**அச்சுவேலி.**

(63317)

---

## 31 ஆவது நாள் நினைவஞ்சலி

கொழும்பு சுங்கத்திணைக்களத்தில் சுங்க அத்தியட்சகராகக் கடமையாற்றும்

**திரு. இ. இராஜயோகனின்**

பாசமிகு தந்தையார்

### சண்முகம் இராசையா

(ஓய்வுபெற்ற டாக்டர் மலேசியா)

அவர்களின் மறைவை ஒட்டி அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ். சுங்கத் திணைக்கள ஊழியர்கள்**

யாழ். சுங்கத்திணைக்களம்,
யாழ்ப்பாணம். (63321)

---

## இதய அஞ்சலி

### அமரர் K. P. புலவர்

(பிரபல வீடியோ உரிமையாளர்
கோண்டாவில் வடக்கு)

மக்கள் மனதில் வீடியோ என்றதும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள்வரை நினைவிற்கு வரும் பெயர் புலவர் வீடியோதான். வீடியோ விற்கே இலக்கணம் வகுத்தவர் அவர்.

எல்லோருடனும் அன்பாகப் பழகி எமக்கு வழிகாட்டியாக இருந்த அவர்களுக்கு எமது இதய அஞ்சலிகள்.

அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வீடியோ கலாமினி,**
**அச்சுவேலி.**

(63316)

---

## மக்கள் நலன் காக்கும் பிரிவு

## அறிவித்தல்

பின்வரும் பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன,

1. **தமிழ்த் தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயிற்சிநெறி**
   இப்பயிற்சிக்கு விண்ணப்பிப்போர் ஜி. சீ. ஈ. (சா/த) பரீட்சையில் சித்தியும் தமிழில் திறமைச் சித்தியும் அடைந்து இருக்க வேண்டும்.
2. **ஆங்கில தட்டெழுத்துப் பயிற்சி நெறி**
   ஜி. சீ. ஈ. (சா / த) சித்தியும் அதில் ஆங்கில பாடத்தில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.
3. **தையற் பயிற்சி நெறி**
   இப்பயிற்சி நெறிக்கு பாடசாலையை விட்டு விலகியோர், கணவனை இழந்த மகளிர். தொழிலற்று தொழில் கல்வி பெற விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்.

மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்போர் தலைமை அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்று 05-03-99.க்கு முன் விண்ணப்பிக்கவும்.

— **செயலாளர்**

மக்கள் நலன்காக்கும் பிரிவு,
இருபாலைச் சந்தி, கோப்பாய். [63318]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கண் திறக்கட்டும்!

யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றி இரண்டு வருடங்கள் கழிந்து போயிற்று. ஆனால் அரசாங்கத்தின் சிவில் நிர்வாகம், இராணுவத் தலையீடு எதுவுமின்றி, முழு அளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று அடிக்கடி கூறிக்கொள்ள வேண்டிய, காட்டிக்கொள்ள வேண்டிய தேவை அரசுக்கு உண்டு.

யாழ்ப்பாணத்தில் போர் நடைபெறவில்லை; இயல்பு நிலை திரும்பிவிட்டது; எவ்வித தங்கு தடையுமின்றி சிவில் நிர்வாகம் நடைபெறுகிறது; அரசாங்கத்தின் ஆணை செயல் ரீதியானஎவ்வித சவாலுமின்றி நிறைவாகச் செல்லுபடியாகிறது என்று வெளி உலகத்துக்குக் காட்டி அவர்களை நம்ப வைப்பதற்கு அரசு அக்கறையுடன் கருமமாற்றுகிறது.

இதற்கான காரணம் எல்லோருக்கும்தெரிந்த ஒன்று தான்.

போரினால் சரிந்துபோயுள்ள யாழ்ப்பாணத்தை நிமிர்த்துவதற்கு அபிவிருத்தி செய்வதற்குஎன்று வெளிநாடுகளிடம் இருந்து நிதி உதவி மற்றும் உதவிகளைப் பெறுவதற்கு இந்தப் பிரதேச மக்களின் வாழ்க்கை வழமைநிலைக்கு வந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது; காட்டப்படுகிறது.

ஆனால்—

1995 ஒக்ரோபருக்கு முன்னர் இருந்ததை விட ஒப்பீட்டளவில் ஆகக் கூடியது சுமார் பதினைந்து வீதமே இப்பகுதி மக்களின் வாழ்க்கை நிலை முன்னேற்றம் கண்டுள்ளது எனலாம். இதனை இங்குள்ள உள்ளூர் அமைப்புகளோ, அதிகாரிகளோ சொன்னால் இலங்கை அரசாங்கம் பொய் என மறுத்துரைக்கும்.

ஏற்கனவே குடாநாட்டுக்கு வந்து தமது உதவிப் பணிகளைச்செய்யும் வெளிநாட்டு நிறுவனங்கள் இப்போது அதனைச் செய்கின்றன. சில நாள்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்திருந்த ஜேர்மனியின் பிரதித் தூதுவர் கலாநிதி ஹான் ஸ்டிவோன் பொத்மர் தமது நாடு இங்கு செய்வதற்குத் திட்டமிட்டு வகுத்த பணிகளில் 25 சதவீதத்தைக் குறைக்க நேரிடும் என்று தெரிவித்திருந்தார்.

அவர் மட்டுமன்றி, ஏற்கனவே இங்கு உதவிப் பணிகளை ஆரம்பித்த ஏனைய நாடுகளும் தமது உதவிகளைக் குறைக்கும் ஆபத்து உண்டு என்று குடாநாட்டின் உயர் அதிகாரிகள் எச்சரிக்கை மணி எழுப்பியுள்ளார்கள்

யாழ்ப்பாணத்துக்குச் சீரான போக்கு வரத்து வசதி இல்லாமை மற்றும் அவை போன்ற காரணங்களாலேயே அவர்கள் முன் சொன்ன முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்று அறியப்படுகிறது.

பிரசாரத்தினால் அலுவல் ஆற்றலாம் என்ற நினைப்பில் இருந்து விடுபட்டு யதார்த்தமான தளநிலையைக் கவனத்திற் கொண்டு யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை நிலையை முன்னேற்ற இனியாவது அரசு மனங்கொள்ளட்டும்; கண்களைத் திறக்கட்டும். இல்லையேல்நட்டம் யாழ்ப்பாண மக்களுக்கு மட்டுமல்ல; மிகப் பெரிய அளவில் அரசாங்கத்துக்கும் தான்!

# உலகளாவிய ரீதியில் இளையோரை ஒன்றிணைக்கும் சாரணர் இயக்கம்

சாரணியம் என்பது மாணவர்களின் கல்வியோடு இணைந்த ஒரு செயற்பாடாகும். உலகில் 144 நாடுகளில் சாரணர்கள் உள்ளனர். 1907 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பேடன்பவல் பிரபு என்பவரால் இவ்வியக்கம் முதலில் ஆண் மாணவர்களுக்காகவே ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் திருமதி பேடன்பவலான ஒலெங்கென் கியர் சோம் என்பவரால் பெண்சாரணியமும்1910 ஆம் ஆண்டு ஆரம்பமாகியது. இதனால் ஆண்கள் சாரணர்கள் என்றும் பெண்கள் சாரணியர் என்றும் அழைக்கப்படலாயினர்.

சாரணியத்தின் முக்கிய குறிக்கோளானது கடவுள், சமயத்திற்கான கடமையை, நாட்டுப் பற்றினை, உலக சகோதரத்துவத்தினை, பிறருக்கு உதவி புரிவதனை வலியுறுத்தியுள்ளது. இதற்கு இஷ்டபூர்வமான அங்கத்துவமும்; அரசியல் பற்றின்மையும் உண்டு. இதனால் சிறு வயது முதலே மாணவர்கள் சந்தோஷமான வாழ்க்கையை அனுபவித்து, அதன் மூலம் தம் பெற்றோர், சமூகம், நாட்டிற்கு நற்பிரசைகளாக வாழ வழி அமைத்துக் கொடுக்கின்றது.

### சாரணர் பிரிவுகள்

முன்பு நான்கு பிரிவுகளாக இருந்த சாரணர் பிரிவுகள் அதாவது குருளைச் சாரணர், கனிஷ்ட சாரணர், சிரேஷ்ட சாரணர், திரிசாரணர் என்பது தற்போதைய புதிய செயற்றிட்டத்தில் மூன்று பிரிவுகளாக குருளைச் சாரணர், சாரணர், திரிசாரணர் என்று பிரிக்கப்பெற்றுள்ளது.

குருளைச்சாரணர்கள் 7முதல் 11 வயதினை உடையவர்களாகவும், 'இயன்றவரை திறமையாகச் செய்வேன்' என்ற மகுட வாக்கியத்தினையும்—

சாரணர்கள் 11 முதல் 17 வயதினை உடையவர்களாகவும், 'தயாராயிருப்பேன்' என்ற மகுடவாக்கியத்தினையும்—

திரிசாரணர் 17 வயது முதல் 24 வயதினை உடையவர்களாகவும் 'சேவை செய்வோம்' என்ற மகுட வாக்கியத்தினையும் உடையவர்களாக உள்ளனர். 24 வயதின் மேல் சாரணர் தலைவர்களாக விளங்குவர்.

இதேபோல் பெண்களுக்கும் அவரவர் வயதுக்கேற்ப சிறு தோழியர். வழிகாட்டிகள், றேஞ்சர் என மூன்று பிரிவுகளாகப் பிரித்து செயற்பாடுகள் அமைக்கப்பட்டுள்ளன. உலகெங்கும் சாரணர்களும், சாரணியர்களும் சகோதரத்துவத்துடன் இணைந்து செயற்படுகின்றனர்.

இதன் மூலம் மாணவர்களுக்குப் போதிப்பது, தனது நாட்டிற்குத் தன்னால் இயன்ற கடமையைச் செய்

**கே. தர்மேசன்**
உதவி மாவட்டஆணையாளர்
காங்கேசன் கிளைச் சங்கம்

விப்பது, அவர்களது வாக்குறுதி விதிகளுக்கமைய நடத்தலுக்கு வழி காட்டுதல் என்பனவாகும். இதனால் மாணவர்களது ஓய்வு நேரம் பயனுள்ள ஒரு முயற்சியாக மிளிர்கின்றது. அவர்களது குண நலனை வளர்க்கின்றது. அவர்களது சேவைக்குச் சந்தர்ப்பங்களை வழங்கி நற்பிரஜையாக வாழப் பயிற்சி அளிக்கின்றது. இதனால் மாணவர்களிடம் கண்ணியம், விசுவாசம், தன்னம்பிக்கை என்பவற்றை வளர்க்கின்றது. உடல், உள, ஆத்மீக வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருக்கின்றது. மாணவரிடையே மறைந்துள்ள ஆற்றல்களை வெளிக்கொணர்கின்றது. இதனால் மனமகிழ்வும், மன நிறைவும் ஏற்படுகின்றது. பரந்த மனப்பான்மை, அன்பு, சேவை, கருணை, உணர்தல் போன்ற சிறந்த பண்புகளை வளர்க்கின்றது. சுருங்கக் கூறின் சாரணியம் மாணவர்களை ஒரு பூரண முழு ஆளுமை உள்ள மனிதராக மாற்றுகின்றது.

### பேடன் பவல் அன்று சொன்னது

சாரணர் இயக்கத்தினை ஆரம்பித்த பேடன் பவல் பிரவு கூறியதாவது:-

''மிக்க சந்தோஷகரமான வாழ்க்கையை நான் அனுபவித்துள்ளேன். அதேபோல மாணவர்கள் ஒவ்வொருவரும் இன்ப வாழ்வு வாழ வேண்டும் செல்வம் படைத்தவர்களாக இருந்தாலும் வாழ்க்கைப்பாதையில்வெற்றிகளைப் பெற்றவனாக இருந்தாலும், மட்டில்லாத அளவில்லா இன்பங்களை அனுபவித்தாலும் மனிதனுக்கு சந்தோஷம் வந்துவிடாது. சிறுவராக இருக்கும் போதே தம்மை ஆரோக்கியமுள்ளவர்களாகவும், திடசாலிகளாகவும், திடகாத்திரமுள்ளவர்களாகவும் ஆக்கிக்கொண்டால் மாத்திரமே சந்தோஷமாக வாழ வழி பிறக்கும். அப்பொழுதுதான் மாணவர்கள் பிரயோசனம் உள்ளவர்களாகவும், பெரியோர்களாக மாறும் பொழுது வாழ்க்கையை அனுபவிக்கக் கூடியவர்களாகவும் இருக்க முடியும். சிறுவர்களாக இருந்து பெரியவர்களாக மாறினாலும் எந்த இடத்திலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் வாக்குறுதிகளையும், விதிகளையும் கடைப்பிடித்து நடத்தல் வேண்டும் என இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.'' என்றார்.

அப்படி நடப்பதற்கு இறைவனின் அருளும் கருணையும் கிடைக்க வேண்டும் என வேண்டிக்கொண்டார்.

பேடன்பவல் பிரபு பற்றி அவரது மனைவி கூறியிருப்பதாவது:.

''எனது கணவர் சில விடயங்களில் மற்ற மனிதர்களிலும் பார்க்க வித்தியாசமான ரோகத் தோற்றமளிப்பார். ஆனால் இயற்கையான தன்மை கொண்டவராகவு, எளிமையான சுபாவத்தைக் கொண்டவராகவும் இருப்பார். அவரோடு யாரும் கதைக்கும் பொழுது அவருடைய உற்றசிநேகிதன் கதைப்பது போலவும், அவர்களில் உண்மையான அக்கறை கொண்டவராகவும் காட்சியளிப்பார். அவர் உண்மையில் அக்கறை உடையவராகவே இருப்பார். இதனால் தான் சாரணியத்தையும் வழிகாட்டி இயக்கத்தையும் உலகக் குழந்தைகளுக்குப் பரப்பி ஆளுமையுள்ள நற்பிரசைகளாக்க முன்வந்தார்'' என்றார்.

எங்கு பார்த்தாலும் இளைஞர்கள் யுவதிகள் தாம் வாழும் சமூகத்திற்கும், நாட்டிற்கும் ஒரு பிரச்சினையாக தோன்றியிருக்கும் இக்காலத்தில் சாரணியம் முன்பைவிட மேலும் முக்கிய இடம் வகிக்கவேண்டியிருக்கின்றது. இதனாலேயே இன்று உலகில் 144 நாடுகளில் 153 தேசிய சாரணர் சங்கங்கள் அமைத்து ஒரு கோடியே எண்பது லட்சம் சாரணர்கள் தம் கடமையைச் சிறப்பாகச் செய்யக் கூடியதாக உள்ளது.

சமூகத்தின் தேவையைப் புரிந்து கொண்டு தகுந்த சமயத்தில் உதவிக்கரம் நீட்டி உதவுவதாக உள்ளது. செடிகளும் பிராணிகளும் பாதுகாக்கப்படல் வேண்டும் என்பதன் மூலம் பிறரை நேசிக்கும் பழக்கத்தினை சாரணியம் ஊட்டுகின்றது. இடர்பாடுகள் நேரும் வேளையில் அறிவு பூர்வமான சிந்தனையையும்செயலையும் காட்டக் கூடியவர்களாக சாரணியம் மாணவர்களை வளர்த்துள்ளது சிக்கனமான, சிறப்பான போசணையான உணவினை விரைவாக சூழலிலே தயாரிக்கும் தனிப்பட்ட பெருமையை உண்டாக்குகின்றது. எதிர்பாராத ஆபத்துக்களை எதிர் நோக்கவும் அவற்றிலிருந்து தாமும் தப்பி ஏனையோரையும் பாதுகாத்துக்கொள்ளவும் இப் பயிற்சி உதவுகின்றது. தேவைக்கு மிஞ்சிய பணத்தினைச் சேமிப்பிலிட்டு வைக்கும் பழக்கத்தினையும் அந்நிதியிலிருந்து சிக்கன முறையில் செலவு செய்யும் பழக்கத்தினையும் பண்பாக சாரணியம் வளர்க்கின்றது.

★

# ஆசிரிய கலாசாலை அனுமதிகள்; நிலையை விளக்கி அதிபர் அறிக்கை

யாழ்ப்பாணம், பெப். 22

ஆசிரிய காலாசாலை அனுமதிக்காக பெரும் எண்ணிக்கையானோர் விண்ணப்பித்துள்ளதை அடுத்து அவர்களுக்கு அனுமதி வழங்குவதில் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

இந் நிலை தொடர்பாக விளக்கம் அளிக்கும் அறிக்கை ஒன்றை பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் எஸ். பத்மநாதன் விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையின் முழு விவரமும் வருமாறு:-

இம்முறை அதிக எண்ணிக்கையில் ஆசிரியர்களை அனுமதிக்க வேண்டும் என்று அமைச்சு பணித்துள்ளது. 31-12-97-க்கு முன் நியமிக்கப்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம் என வர்த்தமானி மூலம் 21-08-98 இல் அறிவிக்கப்பட்டது.

பின்பு இத்திகதி 31-03-98 வரை நீடிக்கப்பட்டது. இதன் விளைவாக குடாநாட்டிலிருந்து மட்டும் 800- க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகத் தேர்வு முடிந்துள்ளது.

கொழும்பிலும், வவுனியாவிலும் நேர்முகப்பரீட்சை முடித்த ஒரு தொகுதி ஆசிரியர்களும் யாழ்ப்பாணம் வரவுள்ளார்கள்.

கலாசாலையில் இரண்டாம் வருட மாணவர்களும் கணிசமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள். புதியவர்களாக ஒவ்வொரு கலாசாலையிலும் 200 பேர் வரையே அனுமதிக்க முடியும். இதற்கு மேல் ஆசிரியர்களை இவ்வாண்டு அனுமதிக்க முடியாது.

குறிப்பாக, பலாலி ஆசிரிய கலாசாலை பல பற்றாக் குறைகளை எதிர் நோக்குகின்றது. இடம்பெயர்ந்த நிறுவனம் என்ற வகையில் இதன் இடவசதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 'ரிவிரஸ' நடவடிக்கையில் இழந்த தளபாடங்கள் மீளக் கிடைக்கவில்லை. 1995 இல் 19 விரிவுரையாளர்கள் இருந்த இடத்தில் இப்போது 12 பேரே உள்ளனர்.

இந்நிலையில், அனுமதி கோரும் ஆசிரியர்களுள் 1998 பெப்ரவரிக்குள் கடமையேற்றவர்களை மட்டுமே இவ்வாண்டு அனுமதிக்க முடியும் என்று கலாசாலை அதிபர்கள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர். இதன் பின் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் அடுத்த ஆண்டே அனுமதி பெறுவார்கள்.

பெரும் எண்ணிக்கையில் ஆசிரியர்கள் பயிற்சிக்குத் தெரிவாகும் போது, அவர்கள் இப்பொழுது கற்பிக்கும் பாடசாலைகள் பாதிப்படைய நேரும்.

தற்போது கூட ஆசிரிய கலாசாலை அனுமதி பற்றி அறுதியான முடிவு தெரிவிக்கப்படாததால், பாடசாலை அதிபர்கள் நேரசூசிகளை வரைய முடியாத நிலையில் உள்ளனர்.

ஆசிரிய கலாசாலை அதிபர்களும் ஆசிரிய கல்வி நிர்வாகக் கிளையும் கலந்துரையாடி வெட்டுத்திகதி ஒன்றை (28-02-98) நிர்ணயித்துள்ளபடியால் இந்தக் குழப்ப நிலை நீங்க ஏதுவாகிறது.— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## குருபூசை

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலயத்தில் அமைந்துள்ள சமாதியில் கந்தையா சுவாமிகளின் வருடாந்த குருபூசை இன்று திங்கட்கிழமை காலை நடைபெறும்.

நண்பகல் 12.30 மணிக்கு அன்னதானம் இடம்பெறும். (ஐ-30)

**உதய வாக்கு**

விருப்பங்களே முரண்பாடு, ஏமாற்றம், வருத்தம் போன்றவற்றை உண்டாக்குகின்றன.

**ஜே கிருஷ்ணமூர்த்தி**

## நாளை

மாசி 11

செவ்வாய்க்கிழமை

திதி: அட்டமி

முன்இரவு 9.37 வரை.

நட்சத்திரம்: கார்த்திகை முற்பகல்: 10.14 வரை.

சுபநேரம்: 11.01- 12.31

ராகுகாலம்: 3.31- 5 01

(பகலுக்கும் இரவுக்கும்) பழைய நேரப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணியில் புதைந்துள்ள மர்மங்கள் துலங்க

# தென்பகுதி சக்திகளும் பாடுபட வேண்டும்

கடந்த வியாழக்கிழமை அமைச்சரவைத் தீர்மானங்களை வெளியிடும் பத்திரிகையாளர் மகா நாட்டில் ராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் மிகவும் முக்கியமான தகவல் ஒன்றை வெளியிட்டார். அதாவது யாழ்ப்பாணத்தில் செம்மணிப் பகுதியிலுள்ள மனிதப் புதைகுழிகளை மார்ச் மாதம் 5 ஆம் திகதி தோண்டுவதென முடிவெடுக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

> செம்மணிப் புதைகுழிகளைத் தோண்டும் விடயத்தில் அரசு விடுத்த அறிக்கை, பத்திரிகையாளர் மாநாட்டில் வெளியிட்ட அறிவிப்பு என்பன குறித்துக் கொழும்புப் பத்திரிகைகள் பலவும் கண்டித்துக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளன.
>
> செம்மணி விவகாரம் சம்பந்தமாக அடிக்கடி கட்டுரைகளை வெளியிடும் ''யுக்திய'' சிங்கள வார இதழ் 21 2. 99 இல் பிரசுரித்த கட்டுரையின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது.

இந்தச் செய்தி இப்பத்திரிகையைப் (யுக்திய) பொறுத்த வரையில் விசேடமான ஒன்றாகும். கிருஷாந்தி குமாரசாமி படுகொலை வழக்கில் எதிரிகளில் ஒருவர் தெரிவித்த தகவல்களின்படி யாழ்ப்பாணத்தில் நூற்றுக் கணக்கானோர் ரகசியமான முறையில் படுகொலை செய்யப்பட்டு செம்மணியில் புதைகுழிகளில் புதைக்கப்பட்டுள்ளனர் என்ற விவரத்தையும் புதைகுழிகள் அமைந்துள்ளதாகக் கூறப்படும் இடங்களை விவரிக்கும் வரைபடங்களையும் எமது 12-07-1998 இதழில் பிரசுரித்திருந்தோம். [இந்தக் கட்டுரை 11-07-98 சஞ்சீவியில் அப்படியே தமிழாக்கம் [செய்யப்பட்டு வெளியானது

### யார் பொறுப்பு

செம்மணி மனிதப் புதைகுழிகள் பற்றிய செய்திகளையும் விவரங்களையும் தொடர்ந்து வெளியிட்டு வந்த இந்தப் பத்திரிகை தனது 19-07-98 ஆம் திகதிய இதழில் 'செம்மணிப் படுகொலைகளுக்குப் பொறுப்பானவர்கள் யார்?' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. இந்தப் படுகொலைகள் இடம்பெற்ற வேளையில் அப்பகுதியில் பணியாற்றிய பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த பொறுப்புள்ள அதிகாரிகள் இந்தக் குற்றச் செயல்களுக்குப் பொறுப்பு இல்லையா எனவும் வினாவெழுப்பியிருந்தோம்.

அக் கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடப் பட்டிருந்தது:—

காணாமற்போன சம்பவங்கள் இடம்பெற்ற வேளையில் யாழ். குடா நாட்டில் கூட்டு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவிருந்தவர் பிரிகேடியர் சிறிலால் வீரசூரிய ஆவார். (நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல்) அவரை அறியாமல் இவ்வாறு 600-க்கும் அதிகமானோர் காணாமற் போயிருக்கக் கூடுமா? என எவரும் வினா எழுப்ப முடியும். இவ்வாறான வினாவுக்கு விடையளிக்கும்போது தனக்கு இதுபற்றி எதுவும் தெரியாது என வீரசூரிய பதிலளிப்பாரெனில் அவருக்கு அடுத்தபடியாகப் பொறுப்புகளை வகித்த இரு அதிகாரிகளான ஜானக பெரேராவும், பீ. ஏ. கருணாதிலகவும் இச்சம்பவங்கள் பற்றி அறிந்திருக்க வேண்டும். அவர்களாலும் இதற்குச் சரியான பதிலைக் கூற முடியாவிடின் அல்லது தங்களுக்குத் தெரியாது எனக் கூறின் காணாமற்போனோர் தொடர்பான சம்பவத்திற்குப் பொறுப்பான அதிகாரி யார் என்பதை வெளிப்படுத்தவேண்டிய பொறுப்பு அவர்களுடையதாகும்—

என அக்கட்டுரையில் கூறப்பட்டிருந்தது.

இந்தச் செய்தி வெளியான பின்னருங்கூட இந் நாட்டு மக்களுக்குத் திருப்தி ஏற்படும் விதத்தில் படைத்துறையினரால் பதிலளிக்க முடியவில்லை.

இச் சம்பவத்திற்குப் பொறுப்பானவர்கள் என அன்று இப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட மூன்று அதிகாரிகளும் தற்பொழுது எங்கு உள்ளனர்? அன்று யாழ்ப்பாணத்தில் படைத் தளபதியாகப் பணியாற்றிய சிறிலால் வீரசூரியா இன்று இராணுவத் தளபதி. அன்று பிரிகேடியராகப் பணியாற்றிய ஜானக பெரேகா இன்று கிழக்குமாகாண படைத் தளபதி. அன்று நியமனஞ் செய்யப்பட்ட மேஜர் ஜெனரலாகவிருந்த பிரிகேடியர் பீ. ஏ. கருணாதிலக இன்று வடபகுதி ராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான கட்டளை அதிகாரி.

### விசாரணைகளுக்குக் குறுக்கீடுகள்

செம்மணிப் படுகொலைகள் தொடர்பாக கடந்த வருடம் நவம்பர் முதலாம் திகதி இப்பத்திரிகையில் ஒரு கட்டுரையை வெளியிட்டு அச்சமயம் நாட்டைக் கலக்கிய செம்மணிப்படுகொலைச் சம்பவம் தொடர்பாக அப்போதைய நிலையை ஆராய்ந்திருந்தோம். அதில் மனித உரிமை ஆணைக்குழு உறுப்பினர்கள் செம்மணி சென்றிருந்ததாகவும் அவர்களது சிபார்சின் பேரில் ஐ. நா. நிபுணர்களை இந்த விசாரணைகளை மேற்கொள்ள அழைப்பது குறித்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் விவரங்கள் வெளியிடப்பட்டிருந்தன. இதன்படி மனித உரிமை ஆணைக் குழுவினால் பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கும் ஜனாதிபதியின் செயலருக்கும் கடிதங்கள் எழுதப்பட்டன. இந்த விசாரணைகளில் ஐ.நா. அமைப்பைத் தொடர்பு கொள்ளுமாறு அரசு உத்தியோக பூர்வமாகக் கோர வேண்டும் என சிபார்சு

## யுக்திய பத்திரிகை வலியுறுத்துகிறது

செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதற்கு அப்பால அந்த அதிகாரிகள் இருவராலும் இவ்விடத்தில் முன்னேற்றம் காண முடியவில்லை.

### நீதிமன்றத்திற்கு அவமதிப்பு

கிடைக்கும் தகவல்களின்படி செம்மணியில் கிறிமினல் குற்றச் செயல்களே இடம் பெற்றுள்ளன, இந்த நாட்டின் சட்டங்களின்படி அந்தக் குற்றச் செயல்கள் தொடர்பாக நீதி விசாரணைகளை மேற்கொள்வது பற்றிய கட்டளையை அந்தக் குற்றச் செயல்கள் இடம் பெற்ற நீதிமன்ற எல்லைக்குள் அமைந்த நீதிமன்றமே விடுக்க முடியும். விசாரணைகளை மேற்கொள்வது தொடர்பாக சிறிலங்கா பொலீஸ் திணைக்களத்தினர் யாழ்ப்பாணம் நீதிமன்றத்திடம் மனு ஒன்றின் மூலம் கோரிக்கை விடுத்திருந்தனர். அதாவது செம்மணி மனிதப் புதைகுழிகளைத் தோண்டி அது தொடர்பான உரிய விசாரணைகளை மேற்கொள்வதற்கு குறித்த நீதிமன்றத்தின் அனுமதியைத் தமக்கு வழங்குமாறு கோரியிருந்தனர். அவ்வாறான அனுமதியை வழங்குவது குறித்து ஆராய்வதற்கு மார்ச் 5 ஆம் திகதியை யாழ். நீதிமன்றம் தீர்மானித்திருந்தது.

நிலைமைகள் இவ்வாறு இருக்கையில் கடந்த 11 ஆம் திகதி அரசின் இராணுவப் பேச்சாளர் 'மார்ச் மாதம் 5ஆம் திகதி செம்மணி மனித புதைகுழிகள் தோண்டப்படும்' என பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார். வெளிநாட்டு அமைச்சினால் விடுக்கப்பட்ட அறிக்கையைக் குறிப்பிட்டே இராணுவப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்திருந்தார். செம்மணி மனிதப்புதைகுழிகள் தொடர்பான விசாரணைகளில் இதுவரை எதுவித தொடர்புகளையும் கொண்டிராத வெளிநாட்டு அமைச்சின் சிக்கலான இந்த அறிக்கையானது. இந்த விடயத்தில் அக்கறை கொண்டிருந்த அனைவரது கவனத்தையும் ஈர்த்தது வெளிநாட்டு அமைச்சு தனது அறிக்கையில் மேலும் தெளிவுபடுத்துகையில் கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் எஸ். ஏ.ஈ. ஏகநாதன் செம்மணியில் மனிதப் புதைகுழிகள் உள்ளதாகச் சந்தேகிக்கப்படும் இடத்தைச் சென்று பார்த்தார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குப் பதிலளித்த யாழ்ப்பாண நீதிவானும் மற்றும் நீதித்துறையினரும் அவ்வாறான சம்பவம் இடம்பெறவில்லை எனத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான விவரங்கள் அடங்கிய கடிதம் யாழ்ப்பாணத்திலுள்ள நீதித் துறையினரால் வெளிநாட்டு அமைச்சு உட்பட தொடர்புடைய அதிகாரிகளுக்கும் வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. வெளிநாட்டு அமைச்சினால் விடுக்கப்பட்ட தவறான தகவலானது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் என தாங்கள் கருதுவதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் செய்தியாளர் மகா நாட்டில் பொறுப்பு மிக்க அதிகாரியால் இவ்வாறு மக்களைத் திசை திருப்பும் விதத்தில் அற்பமாகத் தெரிவிக்கப்பட்ட அறிவிப்பானது இதுவரை செம்மணி தொடர்பான விசாரணைகள் நிறுத்தப்பட்டு— இழுபட்டு— வந்த விதத்தை அவதானிக்கையில் சந்தேகத்தைத் தோற்றுவிக்கிறது.

செம்மணி தொடர்பான விசாரணைகளை நிறுத்துவதற்கோ அல்லது அந்த விசாரணைகள் மேற் கொள்ளப்படாமல் தவிர்ப்பதற்கோ யாருக்கோ தேவை உள்ளதா என்ற கேள்வி எவர் மனத்திலும் எழ இடமுள்ளது. இதுவரை மேற் கொள்ளப்பட்ட மற்றும் மேற் கொள்ளப்படாத விடயங்கள்

**தமிழில்: கஜனி**

குறித்து அவதானிக்கும் போது அவ்வாறான கேள்வி எழுவதற்கு நியாயமான காரணங்கள் தேவையான அளவு உள்ளன என்பது செம்மணிச் சம்பவத்தில் அடங்கியுள்ளன.

1998 மாரி காலம் ஆரம்பிக்க முன்னர் செம்மணி மனிதப் புதைகுழிகள் தோண்டப்பட்டு விசாரணைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என வடக்கிலும் தெற்கிலும் ஜனநாயக சக்திகள் கோரிக்கை விடுத்திருந்தன. இருப்பினும் இந்த நாட்டின் பணிவேகம் மற்றும் பல்வேறு இடையூறுகள் காரணமாக இந்த விசாரணைகள் இதுவரை தாமதமாகின. செம்மணிப் பகுதியில் மாரிகாலம் முடிவுக்கு வந்துள்ளது. இருப்பினும் மழைநீர் அங்கும் இங்கும் தற்போதும் தேங்கி நிற்கிறது.

எவ்வாறாயினும் மிக விரைவில் செம்மணி மண்ணுள் புதைந்துள்ள இரகசியங்கள் வெளிவரும் என யாழ்ப்பாணத்திலுள்ள சமய, ஜனநாயக, அரசியல் மற்றும் மனித உரிமை அமைப்புகள் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றன.

இந்த எதிர்பார்ப்புகளை வடபகுதியினரிடம் கையளித்துவிட்டு தென்பகுதியிலுள்ள ஜனநாயகச் சக்திகள் வாழாவிருக்க முடியாது. செம்மணி நிலத்தடியிலிருந்து மீட்டெடுக்கப்படவுள்ளது இந்த நாட்டிலுள்ள ஜனநாயக மக்கள் சமூகத்திற்கு எதிராக மேற் கொள்ளப்பட்ட கிறிமினல் குற்றங்களின் அடிமுடிகள் என்பதே இதற்கான காரணமாகும்.

---

## ரயில்வே காணிகளில் உள்ள குடிசைகள் அகற்றப்படும்

பளைப் பிரதேசத்தில் ரயில்வே திணைக்களத்திற்குரிய காணிகளில் உள்ள தற்காலிகக் கொட்டில்களை உடனடியாக அப்புறப்படுத்துமாறு புகையிரதத் திணைக்கள பொது முகாமையாளர் பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அறிவித்துள்ளார்.

அந்தந்தப் பிரிவு கிராம அலுவலரின் உதவியுடன் இப்பணியில் ஈடுபட பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பளைப் பிரதேச செயலருக்கும் ரயில்வே திணைக்கள முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஐ-117)

## கோப்பாய் ஆஸ்பத்திரியில்

## 59 ஆயிரம் நோயாளருக்கு கடந்த ஆண்டு சிகிச்சை

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் கடந்த ஆண்டு (1998) 58 ஆயிரத்து 758 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். இதில் மலேரியாவிற்கு ஆயிரத்து 949 பேரும், மூளை மலேரியாவிற்கு 42 பேரும், நாய்கடிக்கு மாதாந்தம் சராசரி 60 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மின்சாரம், நீர், வார்ட் வசதி போன்ற அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் இங்கு சிகிச்சை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## சண்டிலிப்பாயில் தையற் பயிற்சி வகுப்பு

கோப்பாய், பெப். 22

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தால் இந்த ஆண்டிற்கான தையற் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் ஆனைக்கோட்டையில் இப் பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து வைப்பார். இப்பயிற்சி நெறியில் தையல் உட்பட பன்னவேலை, பிளாஸ்ரிக்கூடை பின்னுதல், அலங்காரப் பொருள்கள் செய்தல் போன்ற பயிற்சிகளும் வழங்கப்படும். இறுதியில் சான்றிதழும் வழங்கப்படும்.

(ஐ-72)

## வலிகாமம் பகுதிகளில் கிணறுகளுக்கு குளோரின்

வலிகாமம் தெற்கு, பெப்.22

வலிகாமம் தெற்கு, வலிகாமம் வடக்கு பிரதேச செயலகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பாவனைக் கிணறுகளுக்கு சுகாதாரப் பகுதியினரால் குளோரின் இடப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக வலிகாமம் வடக்கில் ஆயிரத்து 400 கிணறுகளுக்கும், வலிகாமம் தெற்கில் ஆயிரத்து 520 கிணறுகளுக்கும் குளோரின் இடப்பட்டது.

குடல்நோய்களைக் கட்டுப்படுத்தும் நோக்கமாக வலிகாமம் வடக்கு பகுதியில் மீண்டும் இரண்டாம் கட்டமாக குளோரின் இடும் வேலைகளை சுகாதார பகுதியினர் ஆரம்பித்துள்ளனர்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தலைவரின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து அளவெட்டி கிராமத்தில் உள்ள 620 கிணறுகளுக்கும், மல்லாகம் கிராமத்தில் உள்ள 480கிணறுகளுக்கும் இதுவரை குளோரின் இடப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் தெல்லிப்பழை குட்டியபுலம், இளவாலை, பன்னாலை போன்ற இடங்களில் உள்ள கிணறுகளுக்கும் குளோரின் இடப்பட உள்ளது.

இதனைத் தொடர்ந்து வலிகாமம் தெற்குப் பகுதியில் உள்ள கிணறுகளுக்கு இரண்டாம் கட்ட குளோரின் இடும் வேலைகள் ஆரம்பமாகும்.

தெல்லிப்பழைப் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதனைத் தொண்டர்களும், வலிகாமம் வடக்கு பிரதேச சபை ஊழியர்களும் இப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

(ஐ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தலுக்கு சகல அரசியல் கட்சிகளும் தயாராகின்றன

## வாக்களிப்பு திட்டமிட்டபடி ஏப்ரல் 1 இல்

கொழும்பு, பெப். 22

மாகாண சபைகளுக்கான தேர்தல் திட்டமிட்டபடி ஏப்ரல் முதலாம் திகதி நடைபெறும் என தேர்தல் ஆணையாளர் நேற்று அறிவித்துள்ளதையடுத்து சகல அரசியல் கட்சிகளும் தேர்தலுக்கு தயாராகியுள்ளன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் முதலாவது பிரசாரக்கூட்டம் ஜனாதிபதி தலைமையில் எதிர்வரும் 26 ஆம் திகதி அநுராதபுரத்தில் நடைபெறவிருக்கின்றது இறுதிக் கூட்டம் மார்ச் 27ஆம் திகதி கொழும்பு மாநகரசபை மண்டபத்தில் நடைபெறும்.

ஐ. தே. கவின் முதலாவது பிரசாரக்கூட்டம் அதன்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் எதிர் வரும் 4 ஆம் திகதி கம்பளையில் நடைபெறும்.

தேர்தல் நடைபெறும் ஐந்து மாகாணங்களிலும் ஐ. தே. க. சத்தியாக்கிரகப் போராட்டங்களை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

மேல்மாகாண சபையின் முதன்மை வேட்பாளர் கரு ஜெயசூரியா தேர்தலை ஒட்டி சுவரொட்டிகளை ஒட்டுவதோ, பதாகைகளைத் தொங்கவிடுவதோ இல்லை என முடிவு செய்துள்ளார்.

மோதல்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதுடன் சூழல்மாசடைவதையும் இதன் மூலம் தடுக்கலாம் என்று அவர் தெரிவித்தார்.

ஜே. வி. பி. தனது பிரசாரக்கூட்டத்தை அடுத்த மாதம் 5 ஆம் திகதி நுககொடையில் ஆரம்பிக்கவிருக்கின்றது. (இ-3-10)

## அம்பாறை, மட்டக்களப்பு: மழையால் நெல் அழிவு

கொழும்பு, பெப். 22

கடந்த மூன்று நாள்கள் தொடர்ந்து பெய்த மழையினால் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் அறுவடை செய்யப்பட்ட நெல் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

பல்லாயிரக்கணக்கான வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இந்த மழையினால் வீதிகளில் நீர் தேங்கியுள்ளதுடன் நீர் நிலைகளிலும் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-க)

## தொகுப்பு நூல்

வலி: தென் மேற்கு, பெப்: 22

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி உதவி நூலகரினால் தொகுக்கப்பட்ட ''நூலகச் சுடர்'' என்னும் தொகுப்பு நூல் அண்மையில் வெளியாகியது.

கவிஞர் ஜெ, கி. ஜெயசீலன் இதனை வடிவமைத்துத் தொகுத்துள்ளார். 'நூலகச் சுடர்'' தொகுப்பு நூலில் கவிதைகள், கட்டுரைகள், துணுக்குகள் மற்றும் அறிஞர்கள், சிந்தனையாளர்களின் புகைப் படங்கள் இடம்பெற்றுள்ளன. (இ185)

## களுத்துறைக் கைதிகளின் கடிதம் உறவினர்களுக்கு

யாழ்ப்பாணம். பெப். 22

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தமது உறவினர்களுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு ஊடாகக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

அவ்வாறு அனுப்பப்பட்டுள்ள கடிதங்கள யாழ். அலுவலகத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன என்றும்—

உரியவர்கள் அவற்றைப் பெறும்படியும் — மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி எஸ்.சிறீதரன் கேட்டுள்ளார்.

இது வரை கடிதங்களைப் பெறாதவர்கள் விவரம் தொடர்ந்து வெளிவரும்

19 பேரின் விவரம் வருமாறு:-

★ வி. கிருஷ்ணபிள்ளை — அல்வாய்.

★ எஸ். நித்சிங்கராஜா — கொடிகாமம்.

★ வி. பொன்னம்பலம் — சரவெட்டி.

★ கந்தையா செல்வரட்ணம்—பளை.

★ எம். உதயகுமார் — வரணி.

★ கே. நடராஜ் — கரவெட்டி.

★ எம். கந்தையா — பண்டத்தரிப்பு.

★ ஜே. ராகுலன் — நாகர் கோயில்.

★ ரி. காசிப்பிள்ளை — மட்டுவில் தெற்கு.

★ சவுரிகுரு சுமுது—யாழ். புத்தக நிலையம், யாழ்ப்பாணம்.

★ எஸ். ஸ்ரீபன் — பிரதான வீதி, யாழ்ப்பாணம்,

★ ரி. ஆறுமுகம் — கைதடி கிழக்கு.

★ எம். தங்கராஜா — ஆவரங்கால் மேற்கு.

★ எஸ். தர்மசீலன் — சரசாலை வடக்கு.

★ எம். கந்தசாமி — புங்குடுதீவு.

★ எஸ். ரத்னகுமார் — மல்லாகம்.

★ ஜே. றேமன் — அடப்பன் வீதி, யாழ்ப்பாணம்.

★ பி. பத்மகுமார் — அராலி கிழக்கு.

★ எஸ். நவரட்ணம் — இமையாணன் கிழக்கு.

(இ-க-3)

## வழிபாடு

யாழ். கடற்கரை வீதி, முதலாம் குறுக்குச் சந்தியில் உள்ள அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலயத்தில் நீண்டகால இடைவெளிக்குப் பின்பு தற்பொழுது வெள்ளிக்கிழமைகளில் வழிபாடு நடைபெற்று வருகின்றது.

## மேலும் 5 பாதைகள் ஊடாக பஸ் சேவைகள்

நெல்லியடி, பெப் 22

பருத்தித்துறை இ போ.ச. டிப்போ மேலும் ஐந்து பாதைகள் ஊடாக பஸ் சேவைகளை விஸ்தரிக்கவுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து தொண்டமானா — யாழ்ப்பாணம் 752 இலக்க பாதையிலும் —

பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி, கரவெட்டி கிழக்கு, கப்பூது — யாழ்ப்பாணம் 742/1 இலக்க பாதையிலும் —

பருத்தித்துறை — நாகர் கோயில் 755 இலக்க பாதையிலும் —

பருத்தித்துறையிலிருந்து சுன்னாகம் ஊடாக 767/1 இலக்க பாதை வழியாக நவாலிக்கும் —

பருத்தித்துறையிலிருந்து உடுப்பிட்டி ஊடாக 774/1 இலக்க பாதைவழியே சங்கானைக்கும் பஸ் சேவைகள் நடத்தப்படும்.

இப்பாதைகள் ஊடாக பஸ் சேவைகளை மேற்கொள்வதற்கான அனுமதியைப் பெறும் பொருட்டு பருத்தித்துறை டிப்போ முகாமையாளர் க. கமலநாதன் அவ்வப் பகுதி பிரிகேட்டுக்களுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

(இ-109)

## ருகுணு பல்கலைக்கழகத்தில் 25 மாணவர் இடைநிறுத்தம்

கொழும்பு, பெப். 22

பகிடிவதைகளில் ஈடுபட்ட குற்றச் சாட்டின் பேரில் ருகுணுப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 25 மாணவர்களைப் பல்கலைக்கழக நிர்வாகம் இடைநிறுத்தியுள்ளது.

இது தொடர்பான கடிதங்கள் மாணவர்களுக்கு நேற்று வழங்கப்பட்டன.

ஒழுக்கக்கேடு குறித்தும் இந்த மாணவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இடைநிறுத்தப்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழக நூல் நிலையத்தைப் பயன்படுத்தவும் பரீட்சைகளுக்குத் தோற்றவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனத் துணைவேந்தர் தெரிவித்தார். (இ-10)

## மரங்களை தறியாதீர்

வடமராட்சி, பெப். 22

கரவெட்டிப் பகுதியில் இயற்கை வளங்களாக உள்ள மரங்களை அனுமதியின்றி எவரும் வெட்டவோ, அழிக்கவோ கூடாது எனக் கரவெட்டி பிரசே செயலர் செ. ஸ்ரீநிவாசன் அறிவுறுத்தியுள்ளார்.

அனுமதியின்றி மரங்களை வெட்டுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் இயற்கை வளங்களைப் பேணக்கூடிய மரங்களை அதிகளவில் நடுமாறும் அவர் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். [ஐ-173]

## பிரதேச சபைத் தலைவரை வெள்ளம் அள்ளிச்சென்றது

மட்டக்களப்பு, பெப். 22

பதுளை கந்தகெட்டிய பிரதேச சபைத் தலைவர் கே. எம். விஜயசிங்க வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை தனது வாகனத்தில் பதுளை ஓயா சென்ற இவர் சப்பாத்துப் பாலத்தில் இறங்கி நீர்மட்டத்தை அவதானித்துக் கொண்டிருந்த போது திடீரென வெள்ளம் பெருக்கெடுத்ததாகவும் அதில் பிரதேச சபைத் தலைவர் அடித்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ 21)

## கடற்றொழிலாளர்களுக்கு கெயர் நிறுவனம் கடனுதவி

நாவற்குழி, பெப். 22

கைதடி நாவற்குழியைச் சேர்ந்த 50 கடற்றொழிலாளர்களுக்கு கெயர் நிறுவனத்தினால் கடனுதவி வழங்கப்படவுள்ளது.

ஸ்ரீ மகாவிஷ்ணு கடற்றொழிலாளர் சங்கத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட 50 பேருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் இக் கடனுதவி வழங்கப்படும்.

இக்கடன் திட்டம் தொடர்பான விளக்கக் கூட்டம் அண்மையில் இப்பகுதியில் நடைபெற்றது. (இ-5-102)

## சிறுமி காயம்

யாழ்ப்பாணம், பெப். 22

நான்கு வயதுச் சிறுமி ஒருவர் டிராக்டர் சில்லுக்குள் அகப்பட்டு காயமடைந்தார்.

அரியாலை நெடுங்குளத்தில் நேற்று இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் உதயதாஸன் அஜிற்றா என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

டிராக்டர் பின்பக்கமாகச் செலுத்தப்பட்டபோது சிறுமி கீழே விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

விபத்துக்குள்ளான சிறுமி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-15)

## பிரதேச செயலகத் திறப்பு விழா

நெடுந்தீவு, பெப். 22

மீளப் புனரமைக்கப்பட்ட தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலகத் திறப்பு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று காலை 11 மணிக்கு நடைபெறும்.

வேலணை பிரதே செயலர் செ. இரத்தினம் தலைமையில் நடைபெறும் மேற்படி விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு யாழ், அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பார்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம், பிரதம பொறியியலாளர் ந. தேவராஜன் ஆகியோரும்—

சிறப்பு விருந்தினர்களாக வேலணை பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தி, திட்டப்பணிப்பாளர் செ. மகாலிங்கம், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கா. பாலகிருஷ்ணன், கமநல சேவை உதவி ஆணையாளர் க சுந்தரேசன், தீவக வலய கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன், வேலணை முன்னாள் உதவி அரசாங்க அதிபர் ஆ. தியாகராசா, சமாதான நீதிவான் வா. தவச்செல்வம் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்,

க. பழனி, ஓய்வு பெற்ற ஆசிரியர் சி. மாணிக்கம் ஆகியோர் வாழ்த்துரையையும் வேலணை திட்டமிடல் உதவி பணிப்பாளர் த. தெட்சணாமூர்த்தி வரவேற்புரையையும் நிகழ்த்துவர்.

வேலணை கிராம அலுவலர் ஆ. சபாநாதன் நன்றி உரை நிகழ்த்துவார்.

## மழையால் போக்குவரத்துப் பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப். 22

உடுப்பிட்டிக்கும் வல்வெட்டித்துறைக்கும் இடையில் உள்ள வீதி சேதமடைந்ததனால் கடந்த மூன்று நாள்களாக அப்பகுதி ஊடாக இடம்பெற்று வந்த போக்குவரத்து ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இப் பகுதியில் பிரதானவீதியில் அமைந்துள்ள மதகு ஒன்று திருத்த வேலைக்குட்படுத்தப் பட்டிருப்பதனால் போக்குவரத்துக்கு வசதியாக இணைவீதி ஒன்று அமைக்கப்பட்டு போக்குவரத்து நடைபெற்று வந்தது.

இரு நாட்களுக்கு முன் பெய்த பெருமழை காரணமாக இணைவீதி வெள்ளத்தினால் அரித்துச் செல்லப்பட்டு சேதம் அடைந்தது. அந்த இணை வீதியில் வாகனம் ஒன்றும் புதைந்து விபத்துக்குள்ளானது.

இதனால் அந்த வீதி ஊடான போக்குவரத்துச் சேவை தற்போது முற்றாக ஸ்தம்பிதம் அடைந்து கரணவாய் குஞ்சர் கடைச்சந்தி உடுப்பிட்டி, வல்லை ஊடாகவே போக்குவரத்து இடம் பெற்றுவருகிறது.

இதனால் வல்வெட்டியில் இருந்து அல்வாய் நாவலடி வரை உள்ளடக்கிய பகுதி மக்கள் பிரயாணத்தை மேற்கொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

(இ-15)

## மெய்வல்லுநர்போட்டி

நெடுந்தீவு, பெப். 22

நெடுந்தீவு றோ.க. மகளிர் மகா வித்தியாலய மெய்வல்லுநர் போட்டிகள் 25 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வித்தியாலய அதிபர் அருட்சகோதரி ஜெயசீலி றொட்றிக்கோ தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராகத் தீவக வலய கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனும் கௌரவ விருந்தினராகப் [illegible] மொன்பேட் அடிகளும் கலந்து கொள்வார்கள்.

(இ-111)

## 5 சிவாச்சாரியார்களுக்கு சேவை நலன் பாராட்டு

கொழும்பு, பெப். 22

சிவாச்சாரியார்கள் ஐவருக்கு சேவை நலன் பாராட்டு விழா நடத்த சர்வதேச இந்துமத குருபீடம் ஏற்பாடு செய்துள்ளது.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆன்மீகப்பணிபுரியும் ஐந்து மூத்த சிவாச்சாரியார்கள் இதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சர்வதேச இந்துமத குருபீடத்தின் ஸ்தாபகரும், இலங்கைப் பிராமண சமாஜத்தின் தலைவருமான கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் பாராட்டு விழாவில் சிறப்பு அதிதியாக தமிழ்நாடு கிழக்குத்தாம்பரம், சிவாகமதிலகம் சிவஸ்ரீ தே.சு. முத்துக்குமாரசாமி சிவாச்சாரியார் கலந்து கொள்வார்.

இலங்கைச் சிவாச்சாரியார்களுக்கு அவர் பொன்னாடை போர்த்தி பட்டமளித்துக் கௌரவிப்பார்.

ஆலய அறங்காவலர்கள், இந்து சமய சங்கத்தவர்கள், சைவ அபிமானிகள் சிவாச்சாரியார்களுக்கு பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவிப்பார்கள்.

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் பல ஆண்டுகள் இறை பணியாற்றிய ''சிவாகம சிரோமணி'' சிவஸ்ரீ சுப்பிரமணியப்பட்டர் —

இலங்கையிலிருந்து, சிங்கப்பூர், மலேசியா, ஜேர்மனி, கனடா போன்ற நாடுகளுக்குச் சென்ற நூற்றுக்கணக்கான கும்பாபிஷேகங்கள் சங்காபிஷேகங்கள், மஹோற்சவங்களை நடத்திவரும பிரதிஷ்டா சிரோமணி நவாலியூர் சாமி விஸ்வநாதக் குருக்கள் —

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆண்களும் பிரசவிக்கலாம் என்கிறார் பிரிட்டிஷ் கரு மருத்துவத்துறை நிபுணர்

லண்டன், பெப். 22

ஆண்களும் பிள்ளைப் பெறத்தக்க வகையில் மருத்துவத்தில் தொழில் நுட்பம் தற்சமயம் முன்னேறிவந்துள்ளது என்று உலகில் முன்னணி கருமருத்துவத்துறை நிபுணர் ஒருவர் கூறியுள்ளார்.

ஓர் ஆணின் வயிற்றுப் பகுதியில் கருவையும், அதனைத் தாங்கி நிற்கும் அமைப்பையும் அறுவைச் சிகிச்சை மூலம் பொருத்தி விடமுடியும் என்றும் —

அதன் மூலம் அந்த ஆண், குழந்தையை வயிற்றில் சுமக்க முடியும் என்றும் —

பின்னர் ''சிசேரியன்'' அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தையை வெளியில் எடுத்து விடலாம் என்றும் —

ஈஸ்டன் பிரபு என்ற நிபுணர் லண்டலில் வெளியாகும் 'சண்டே ரைம்ஸ்' என்ற நாளேட்டின் நேற்றைய பதிப்பில் எழுதியுள்ளார்.

லண்டனில் உள்ள சரு மருத்துவ மனை ஒன்றில் தலைவராக உள்ள அவர் இந்தச் சிகிச்சை மிகவும் ஆபத்தாக முடியக் கூடும் என்பதையும் —

இதில் ஆண்களுக்கு மிகப்பெரிய அளவில் பெண் ஹோமோன்கள் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார். (இ-3)

# பிப்பிலி - நவாலி வீதியை திருத்துமாறு கோரிக்கை

வலி.தென்மேற்கு, பெப். 22

நீண்டகாலமாக திருத்தப்படாது இருக்கும் பிப்பிலி— நவாலி வீதியை (புலவர் வீதி), திருத்தித் தருமாறு நவாலி இளைஞர் வட்டம் கேட்டுள்ளது.

மேற்படி பிப்பிலி— நவாலி வீதி மோசமான நிலையில் இருப்பதாகவும் —

பொதுமக்கள் மற்றும் மாணவர்கள், விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நவாலி வீதியில் இருந்து ஆரம்பிக்கும் கல் ஒழுங்கையும் மிகவும் மோசமான நிலையில் உள்ளது

இந்த வீதியையும் உடன் செப்பனிட உதவுமாறு நவாலி இளைஞர் வட்டம் யாழ்ப்பாணம் கடற்கரைவீதியில் உள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளரைக் கேட்டுள்ளது. (இ-185)

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்)

கிய தேசிய சமாதானக் கூட்டமைப்பும் வர்த்தக சம்மேளனங்களின் கூட்டமைப்பும் தனித்தனியாக சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வருவது தெரிந்ததே. (இ-3-10)

## 5 சிவாச்சாரியார்...

(ஒன்பதாம் பக்கத் தொடர்)

கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் தொடர்ச்சியாக பல ஆண்டுகள் பிரதம சிவாச்சாரியாராக இருந்து பல கும்பாபிஷேகங்கள், சங்காபிஷேகங்கள், மஹோற்சவங்களையும் நடத்திவரும் சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள் —

நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலய ஆதீன குருவாகவிருந்து இலங்கையின் பல பாகங்களிலும் வெளி நாடுகளிலும் பல கும்பாபிஷேகங்களையும் சங்காபிஷேகங்களையும் நடத்தி வருகின்ற பிரதிஷ்டா பூஷணம் நயினை சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள் —

கொழும்பு, மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீபாலசெல்வ விநாயகர் ஆலயத்தில் தொடர்ந்துபல ஆண்டுகளாக பிரதம குருவாகஇருந்து ஆன்மீகப் பணிபுரிந்து வருகின்ற 'சிவாகமதிலகம்' பிரம்மஸ்ரீ பா.ஷண்முகரெட்ணசர்மா—

ஆகியோர் மேற்படி விழாவில் கௌரவிப்படவுள்ள சிவாச்சாரியர்கள் ஆவர்.

கௌரவிக்கப்படவுள்ள ஐந்து சிவாச்சாரியர்களுக்கும் இலங்கைஇந்துமதகுருபீடாதிபதியாக இருந்த ''சிவாகமஞானி'' அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியாரின் ஞாபகார்த்தமாக சர்வதேச இந்துமத குருபீடத்தின் சார்பிலும் இலங்கை பிராம்மண சமாஜத்தின் சார்பிலும் சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடாதிபதி கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார் தங்கப் பதக்கம் சூட்டி கௌரவிப்பார்.

மேற்படி விழா மார்ச் 3ஆம் திகதி கொழும்பில் நடைபெறும். (இ)

## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்)

கின்றது.

இந்தக் விசாரணைகளில் பங்குபற்ற இரகசிய பொலீஸ் குழு ஒன்று யாழ்ப்பாணம் வருகின்றது.

இந்த குழுவுக்கு புறம்பாக செம்மணியில் மனிதப் புதைகுழிகள் இருக்கும் பகுதியை நேரில் பார்வையிட்டு தோண்டும் சூழ்நிலை உள்ளதா? என்பதை ஆராயவே நிபுணர் குழு வருகின்றது.

சட்ட மருத்துவத்துறை பேராசிரியர் நெரியல்லகே சந்திரசிறி, மண்ணியல் நிபுணர் பேராசிரியர் கே. ஏ. நந்தசேன, அரசாங்க பகுப்பாய்வாளர் எம். ஜே; மெண்டிஸ் ஆகியோர் இந்தக் குழுவில் இடம் பெறுகின்றனர்.

நிபுணர்குழு செம்மணி பிரதேசத்தை நேரில் பார்வையிட்டு அங்குள்ள நிலைமை தொடர்பாக இரகசியப் பொலீஸருக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் என்றும் —

அந்த அறிக்கையை இரகசியப் பொலீஸார் யாழ். நீதிவானிடம் சமர்ப்பிப்பர் என்றும் —

அதன் பின்னர் நீதிவான் புதைகுழியைத் தோண்டுவது தொடர்பான உத்தரவைப் பிறப்பிக்கலாம் என்றும் — கூறப்பட்டது. (இ-3)

# மறவன்புலோ, நாவற்குழி பகுதிகளில் பயிர்கள் அழிவு

நாவற்குழி பெப். 22

கடந்த 19 ஆம் திகதி பெய்த பெருமழையினால் தனங்களப்பு, மறவன்புலோ, நாவற்குழிப் பகுதிகளில் நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது.

அறுவடைக்குத் தயாரான நிலையில் இருந்த நெற்பயிர்கள் வெள்ளத்தில் அமிழ்ந்துள்ளதுடன் அறுவடை செய்யப்பட்டு உப்பட்டியாக காயவிடப்பட்ட நெல் மற்றும் சூடு அடிப்பதற்குத் தயாராக இருந்த நெல் போன்றவையும் மழை நீரில் மூழ்கியுள்ளன.

மேற்குறிப்பிட்ட இடங்களில் நெற்செய்கை நல்ல விளைச்சலைக் கொடுத்துள்ளபோதிலும்தற்பொழுது பெய்துள்ள மழையினால் அவை அழிந்து போயுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5-102)

# டாக்டர்கள் வேலை நிறுத்தம் இன்று முதல் விஸ்தரிப்பு

கொழும்பு, பெப். 22

அரச வைத்தியசாலைகளில் பணி புரியும் டாக்டர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் போராட்டத்தை விஸ்தரிக்கவிருக்கின்றனர்.

டிக்கோயா மருத்துவமனை ஊழியர் ஒருவரை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நாடாளுமற உறுப்பினர் ஆறுமுகம் தொண்டமான் கடத்தியதாகக் கூறப்படும் சம்பவத்தையடுத்து கடந்த ஒரு வார காலமாக மத்திய மாகாணத்தைச் சேர்ந்த 27 வைத்தியசாலைகளில் வேலை நிறுத்தம் இடம்பெறுகின்றது.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து கண்டி மற்றும் பேராதனை மருத்துவமனை வைத்தியர்கள் இன்று வேலை நிறுத்தத்தில் குதிக்கின்றனர்.

இந்த வேலை நிறுத்தத்தை நாடு முழுவதும் விஸ்தரிக்கப் போவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (இ-3-10)

# ஸ்லேவாக்கியாவில் இறந்தோரில் நால்வர் வடமராட்சி கிழக்கு வாசிகள்

செம்பியன்பற்று, பெப். 22

ஸ்லேவாக்கியாவில் இடம் பெற்ற ரயில் விபத்தில் கொல்லப்பட்ட 6 ஈழத்தமிழர்களில் நால்வர் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்த நால்வர் விவரம் வருமாறு:

★ மதுரநாயகம் — ராம்குமார் (வயது 19) செம்பியன்பற்று

★ முத்துராசா—கெல்சன் (வயது 19) மணல்காடு

★ அ. அலோசியஸ் (வயது 28) மணல்காடு

★ த. சனத் (வயது 24) தாளையடி

ரயிலினால் மோதுண்டு இவர்கள் உயிரிழந்தது தெரிந்ததே. (இ-36)

# வர்த்தக சங்க உறுப்பினர் ஒபடகேயைச் சந்திப்பர்

யாழ்ப்பாணம், பெப். 22

கொழும்பு — யாழ் வர்த்தகர் சங்கத்தின் ஒருங்கமைப்பில் பொருள்களை ஏற்றி வரும் கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கப்படுவதில் நிலவும் தாமதம் குறித்து பிரஸ்தாப சங்கத்தின் பிரதிநிதிகள் இன்று வடமாகாண மீள்குடியேற்ற, புனர்வாழ்வு அதிகாரசபைத் தலைவர் என். கே. ஒபடகேயுடனும் மற்றும் புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகளுடனும் பேச்சு நடத்த உள்ளனர்.

மேற்படி சங்கத்தின் ஏற்பாட்டில் மூன்று கப்பல்களில் பொருள்கள் ஏற்றப்பட்டுள்ளன என்றும்—

அவற்றில் 'ஓசன் சக்ஸஸ்' கப்பல் தற்சமயம் பருத்தித்துறையில் பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டு உள்ளதாகவும்—

இழுவைப்படகு வசதி போதியளவு இல்லாததால் இந்த கப்பலிலிருந்து பொருள்களை இறக்கும் பணி மெதுவாக இடம்பெறுவதாகவும்— சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக்கப்பல்களில் இருந்து பொருள்களைத் துரிதமாக இறக்க ஏற்பாடு செய்யுமாறு சங்க உறுப்பினர்கள் வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் என். கே. ஒபடகேயிடம் இன்று கோரிக்கை விடுப்பர்.

இன்றைய பேச்சுக்கள்பயன் அளிக்காத பட்சத்தில் நகரில் உள்ள கடைகளைப் பூட்டி போராட்டம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாக சங்க வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன, (இ-3)

# மரமுந்திரிகை பற்றிய கருத்தரங்கு

வலி. தென்மேற்கு பெப் 22

இலவச மரமுந்திரிக் கன்று விநியோகம் தொடர்பான ''விவசாயிகள் கருத்தரங்கு'' மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தினால் நடத்தப்பட உள்ளது.

சம்மேளன தலைவர் சி. முதலியார் இதனைத் தெரிவித்தார்.

மார்ச் முதலாம் திகதி காலை 10 மணிக்கு மானிப்பாய்மேற்கு சம்மேளன தலைவர் காரியாலயத்தில் இந்த கருத்தரங்கு நடைபெறும். (இ-185)

# கண்டியில் முகாமிட்டு அனுருத்த பிரசாரம்

கொழும்பு, பெப். 22

மத்திய மாகாண சபைக்கான தேர்தல் நடவடிக்கைகளை ஒழுங்கு செய்யப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தற்சமயம் கண்டியில் முகாமிட்டுள்ளார்.

கண்டி பல்லேகலவில் அமைந்துள்ள புதிய சுற்றுலா விடுதியில் தங்கியிருக்கும் இவர் ஹெலி மூலம் சென்று தேர்தல் நடவடிக்கைகளைக் கவனித்து வருகிறார் என்று கூறப்பட்டது.

அமைச்சர் தங்கியுள்ள விடுதிக்கு அருகில்உள்ள வீடுகளில் உள்ள மக்களைப் பாதுகாப்பின்நிமித்தம் வெளியேறுமாறு படையினர் கோரியதாகவும்—

அவர்கள் வெளியேற மறுத்து விட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3-10)

## மடுபாதை...

(முதலாம் பக்கத் தொடர்)

வந்து சேர்ந்துள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேசம் 'சூரியசக்தி' நடவடிக்கையின் போது படையினரால் கைப்பற்றப்பட்ட சமயம் அங்கு சிக்கிய பொதுமக்களைப் படையினர் கைது செய்து வவுனியாவில் உள்ள முகாமில் வைத்திருந்தனர்.

இவர்களில் 23 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அங்கிருந்து புறப்பட்டு மடுபாதை ஊடாக நேற்று வன்னி வந்து சேர்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

முன்பும் இவ்வாறு 33 குடும்பங்கள் வன்னி திரும்பியது குறிப்பிடத்தக்கது. (இ-3-164)

# பருத்தியடைப்பில் அறநெறிப்பாடசாலை

வேலணை, பெப். 22

ஊர்காவற்றுறை, பருத்தியடைப்புப் பகுதியில் அறநெறிப் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ந. மதனராஜன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக மாவட்ட காணிப் பதிவாளர் ந. சதாசிவஐயர் கலந்து கொண்டார்.

கௌரவ விருந்தினர்களாக ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், ஊர்காவற்றுறை பிரதேச சபைச் செயலாளர் கு.கணேசலிங்கம், வேலணை பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தி மற்றும் யாழ். மாவட்ட இந்து சமயப் பேரவைத் தலைவர் வி.கே.தனபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-ரி)

## தரமற்ற...

(முதலாம் பக்கத் தொடர்)

யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தரம் குறைந்த அரிசி அனுப்பப்பட்ட விடயத்தைப் பிரஸ்தாபித்தார். அந்த அரிசியின் மாதிரியையும் அவரிடம் அரச அதிபர் கையளித்தார்.

குருநகர் களஞ்சியத்துக்குச் சென்று அந்த அரிசியை நேரில் பார்வையிட்டுவிட்டு கொழும்பு திரும்பியுள்ள ஒபடகே அங்குள்ள அதிகாரிகளுடன் இது தொடர்பாக ஆராய்ந்து உடன் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். (இ-3)

## வாட்டர் ஜெற்...

[முதலாம் பக்கத் தொடர்]

படுவதற்கு முதல் நாள் ஆனையிறவில் உள்ள 54 ஆவது படையணியின் தலைமையகத்தில் நடைபெற்ற உயர் பாதுகாப்பு [illegible] தரையில் புலிகளின் தாக்குதல் ஒன்று இடம் பெறலாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-10)

# புனரமைப்பு

சண்டிலிப்பாய், பெப். 22

மாதகல் விபுலானந்தர் சிக்கன கடன் சேமிப்புக் கூட்டுறவுச் சங்கம் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. (இ-135)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] யில் 22-02-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org